

# திருக்கோயில்



ஆகஸ்ட்
1998

விலை
ரூபாய் ஐந்து



மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் சந்தான குரவர் படத்திறப்புவிழா மிகச் சிறப்புற நடைபெற்றது. இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. மெய்கண்டதேவன் இ.ஆ.ப. அவர்கள் சந்தான குரவர் திருவுருவப்படங்களைத் திறந்து வைத்துச் சிறப்பித்தார்கள். தவத்திரு முத்துக்குமாரசாமி தம்பிரான் சுவாமிகள், பேராசிரியர் முனைவர் வை. இரத்தினசபாபதி, முனைவர் சு. விசுவநாத சிவாச்சாரியார், ''திருக்கோயில்'' ஆசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம், செந்தமிழ் வேள்விச் சதுரர் மு. பெ. சத்தியவேல்முருகன் மற்றும் தமிழறிஞர்கள் பலரும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இணை ஆணையாளர் திரு இரா. சுப்பிரமணியன், பி.ஏ.பிஎல்., மற்றும் திருக்கோயில் நிர்வாக அதிகாரியும் துணை ஆணையாளருமான திரு பன்னீர் செல்வம், அறங்காவலர் பெருமக்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

# திருக்கோயில்



திங்கள் இதழ்



தனி இதழ் : ரூ. 5.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 60.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 500.00

| மாலை 40 | திருவள்ளுவர் ஆண்டு 2029 ஆகஸ்ட் 1998 | வெகுதானிய ஆண்டு ஆடி | மணி 8 |
|---|---|---|---|



**சிறப்பாசிரியர்**

திருமிகு ச. மெய்கண்ட தேவன், இ.ஆ.ப.,

ஆணையாளர்

**ஆசிரியர்**

முனைவர் த. அமிர்தலிங்கம்,

எம்.ஏ., பி.எச்.டி.,

**திருக்கோயில் நிர்வாகக் குழுவினர்**

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.,

கூடுதல் ஆணையாளர்

திரு த. சுந்தரம், பி.ஏ., பி.எல்.,

இணை ஆணையாளர், தலைமை இடம்

திரு மு. இராமச்சந்திரன், பி.ஏ.,

ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு தி. ஜெயராமன், பி.ஏ.பி.எல்.,

இணை ஆணையாளர் - செயல் அலுவலர்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி

திருக்கோயில், பழநி.


**முகப்பு**

சூடிக்கொடுத்த சுடர்க்கொடி

ஆண்டாள்

## பொருளடக்கம்


*மெய்கண்ட தேவன் மிகுசைவ நாதன்*
- முனைவர் த. அமிர்தலிங்கம்

*"அழுதால் உன்னைப் பெறலாமே"*
- சேது. சிவா

*பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே*
- டாக்டர் இரா. கு. நாகு

*கூட்டு வழிபாடு பற்றிய ஆணையாளர் சுற்றறிக்கை*

*கம்பனும் திருமுறைகளும்*
- கம்பன் கவிநயமணி வே. தியாகராசன்

*சைவமும் பெரிய புராணமும்*
- முனைவர் இரா. செல்வகணபதி

*பைந்தமிழ் மாறன் பசுந்தமிழ் ஆனந்தம்*
- திருமதி அனுசுயா, எம்.ஏ.எம்.ஃபில்.

*சிவனடியார்களுக்குச் சாதிபேதம் உண்டா?*
- செந்தமிழ் வேள்விச் சதுரர் மு. பெ. சத்தியவேல் முருகன்

*வழிபாட்டுச் சிறப்பும் வரலாற்றுப் பெருமையும் மிகுந்த அன்பில் திருக்கோயில்கள்*
- இ. ஸ்ரீதரன், எம்.ஏ

*வினாவும் விடையும்*



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

**உயர்திரு ஆணையாளர் அவர்கள்**

**திருக்கோயில்**

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

தொலைபேசி : 8279407

# ''மெய்கண்டதேவன் மிகுசைவ நாதன்''

— முனைவர் த. அமிர்தலிங்கம்

நமது சைவ சமயம் மிகச் சிறந்த தத்துவ நுட்பங்களைக் கொண்டு விளங்கும் பெரும்புகழ் சைவம் என்பது ஜி.யூ. போப், ரெவரென்ட் கௌடி போன்ற மேலை நாட்டு அறிஞர்களும் அறுதியிட்டுக் கூறியுள்ள ஒருபெரும் உண்மையாகும்.

ஜி.யூ. போப் அவர்கள் நம் சைவ சமயச் சிறப்பினை

"It is the choicest product of the Dravidian intelect and the most elabarate influential and undoubtedly the more instrincically valuable of all the religion of India"

என்று போற்றியுள்ள கருத்து இங்கு எண்ணி எண்ணி மகிழத்தக்கது.

சைவ சமயம் திராவிட மக்களின் மூதறிவின் விளைவு. இந்தியாவில் உள்ள எல்லாச் சமயங்களிலும் பரந்த நிலையுடையது, எல்லோராலும் மதிக்கத்தக்க செல்வாக்கும் பெருமதிப்பும் பெற்றது என்பது ஜி.யூ. போப் அவர்களின் கருத்துக்களில் அடங்கியுள்ள செய்திகளாகும்.

அவ்வாறே ரெவரெண்ட கௌடி அவர்களும் ''சைவ சித்தாந்த கொள்கை போன்ற கருத்தும், உண்மையும், வழிபாட்டு ஒழுங்கும் அமைந்த சமயம் எதுவும் இல்லை. சைவ சித்தாந்தக் கொள்கை பழம் பெரும் கொள்கை'' என்று போற்றியுள்ளார்.

"There is no school of thought and no system of faith of worship that comes to us with anything like the claims of Saiva Siththantha. The system possess the merits of great antiquity"

என்பது Rev. Gowdie அவர்கள் சைவ சித்தாந்தத்தின் பெருமை பற்றிக் கூறியுள்ள தொடர்களாகும்.

இவ்வாறு மேலைநாட்டு அறிஞர்கள் பலரும் சைவ சித்தாந்தத்தின் பெருமையை வியந்து போற்றும் பெருமைக்குக் காரணமாக உள்ள ஒருபெரும் பெரியார் தாம் நாம் இப்போது அறியப்போகும் வரலாற்றின் நாயகராக விளங்கும் மெய்கண்டார் ஆவார்.

**''பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித**
**மெய்கண்ட நாதன்அருள் மேவும் நாள் எந்நாளோ''**

என்று தாயுமான சுவாமிகள் போற்றியுள்ளமை கொண்டும் மெய்கண்டார் பெருமையை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

மெய்கண்டாரின் மெய்ம்மையைப் போற்றும் அருள்நூல்கள் பலவாகும்; அருளாளர்களும் பலர் ஆவர். அவற்றை விவரிக்கின் பெருகும் என்பதால் ஒன்றிரண்டை மட்டும் கண்டு மகிழ்வோமாக.

**''காசினிமேல் வந்த அருட்கதிரோன்'' என்றும்**
**''மெய்கண்ட தேவன் மிகுசைவ நாதன்''**

எனவும் இவர் இப்புவியில் தோன்ற ''திருமுறை'' யிலிருந்து ஏடு எடுத்துக் கொடுத்து வழிகூறி அருளிய அருள்நந்தி நமச்சிவாயரே போற்றியுள்ளார் என்றால் இவர்தம் பெருமையை என்னென்பது?

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசு சுவாமிகளும் பாடிப் பரவிய பெருமை பெற்ற திருத்தலம் பெண்ணாகடம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் சிவபெருமானைப் போற்றாதே ஆற்றாநாள் போக்கிய தம் குற்றம் தீரத் தம்மேனிமீது சூலம், இடபக்குறி இடவேண்டும் என்று வேண்டி அவ்வாறே இடப்பெற்ற அற்புதம் நடந்த திருத்தலம்தான் பெண்ணாகடம் ஆகும்.

இந்தப் பெண்ணாகடத் திருத்தலத்தில் கார் கார்த்த சைவ வேளாளர் மரபில் அச்சுதக்களப்பாளர் என்ற ஓர் சிற்றரசர் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்தார். இவருக்கு எல்லாச் செல்வங்களும் குறைவின்றி இருந்தும், வெகுகாலம் மக்கட் செல்வம் வாய்க்காத மனக்குறை இருந்து வந்தது.

தம் குருநாதரும், திருத்துறையூரில் வசித்தவருமான சகலாகம பண்டிதரிடம் சென்று தம் குறை தீர வழிகூறுமாறு வேண்டினார்.

சகலாகம பண்டிதர் தேவாரத் திருமுறையைப் பூசித்துக் கயிறு சார்த்திப் பார்த்ததில் திருஞான சம்பந்தர் அருளிய

''பேயடையாப் பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா ஒன்றும்
வேயன தோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே'

என்ற பாசுரம் கிடைத்தது.

''பிள்ளை வரம் பெறுவீர்; ஐயம் வேண்டாம்'' என்பதாகத் திருஞானசம்பந்தர் திருமுறையிலிருந்து அருள்வாக்கு கிட்டிய படியால், சகலாகம பண்டிதர் தம்சீடராகிய அச்சுத களப்பாளரையும் அவர்தம் துணைவியாரையும் பாசுரத்தில் கூறியிருந்தபடி திரு வெண்காட்டுத் திருத்தலத்திலுள்ள சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், அக்கினி தீர்த்தம் ஆகிய முக்குளங் களிலும் மூழ்கி திருவெண்காட்டு இறைவரை வழிபாடு செய்து உய்யுமாறு பணித்தார்.

அச்சுதக் களப்பாளரும் தம் குருநாதர் ஆணைப் படி திருவெண்காடு சென்று மெய்யான பக்தியோடு முறைப்படி திருக்குளங்களில் நீராடி நாள்தோறும் பிள்ளைவரம் தந்தருள திருவெண்காட்டு இறைவரை உருகி வேண்டி வழிபட்டு வருகையில் ஒருநாள் இறைவர் அச்சுதக் களப்பாளரின் கனவில் தோன்றி வரம் தந்து அருளினார்:

''திருஞானசம்பந்தரைப் போற்றி அவர் அருளிய வாக்கின்படியே நீ நடந்து கொண்டதனால் திருஞான சம்பந்தனைப் போலவே உனக்கொரு மகனை அளிப்போம்'' என்று அருளிச் செய்தார் திருவெண்காட்டு இறைவர்.

இறைவன் திருவருள்படியே அச்சுதக களப் பாளருக்கு ஞாலமெல்லாம் போற்ற, காசினிமேல் அருட்கதிரோனாக ஆண்மகவு பிறந்தது. அக்குழந்தைக் குத் திருவெண்காட்டு இறைவருக்குரிய ''சுவேதவனப் பெருமாள்'' என்ற பெயரையே இட்டு மகிழ்ந்து போற்றி வளர்த்தனர் பெற்றோர்.

சுவேதவனப் பெருமாள், திருவெண்ணெய் நல்லூரில் தம் தாய்மாமனாரான காங்கேய பூபதியின் வீட்டில் வளர்ந்தபோது அவருடைய இரண்டு வயதில் ஒரு அதிசயத்தக்க அற்புதம் நடைபெற்றது.

திருக்கயிலாயத்தில் நந்திதேவரின் ஆசாரிய பரம்பரையில் தோன்றிய சத்தியஞான தரிசினிகளின் மாணவரான பரஞ்சோதி முனிவர், அகத்தியரைக் காணும் பொருட்டு ஆகாய மார்க்கமாக விமானம் ஒன்றில் பறந்து வந்து கொண்டிருந்தபோது திருவெண் ணெய் நல்லூரில் விளையாடிக்கொண்டிருந்த இரண்டு வயதுள்ள ஞானக்குழந்தையாம் சுவேத வனப்பெருமாளைக் கண்டார்.

சாமுசித்தராக விளங்கிய சுவேதவனப் பெரு மாளும் பரஞ்சோதி முனிவரைக் கண்டு வணங்கி நின்றார்.

முற்பிறவிகளிலேயே **சரியை, கிரியை, யோக** நெறிநின்று அப்பூர்வ ஞானத்தோடே **தோன்றி, இப்** பிறவியில் வீடுபேறு ஒன்றையே நாடிநிற்கும் தவ யோகிகளே சாமுசித்தர் என்று அழைக்கப்படுவர் ஆவர்.

அத்தகைய சாமுசித்தராய் நின்ற சுவேதவனப் பெருமாளைக் கண்டவுடன் அவர்தம் நிழல்பட்டு பரஞ்சோதி முனிவர் வந்த விமானம் மேலே செல்லா மல் தடைப்பட்டு நின்ற விந்தையை என்னென்று வியப்பது?

பரஞ்சோதி முனிவர் கீழிறங்கி வந்து தாம் கயிலையில பெற்ற சிவஞான போதத்தைக் குழந்தைக்கு ஞானோபதேசம் செய்து தம் குருவின் பெயராகிய சத்தியஞானதரிசினிகளின் பெயரையே தமிழில்'' மெய்கண்டார்'' என சுவேதவனப் பெரு மாளுக்கு வழங்கி ''உம்மால் இவ்வையம் இனி உய்யும்'' என்பதாக வாழ்த்தி விடைபெற்றுச்சென்றார்.

திருஞான சம்பந்தருக்கு மூன்று வயதில் சிவ ஞான அமுதம் கிட்டியது; திருஞானசம்பந்தர் தந்த திருமுறையால் தோன்றிய மெய்கண்டாருக்குச் சிவ ஞான போதம் இரண்டு வயதிலேயே கிட்டிவிட்டது. என்னே இறைவன் அருள்!

இத்தகைய ஞானக்குழந்தையாகிய மெய்கண் டார் அருட்புகழ் அவனி எங்கும் விரைந்து பரவியது.

திருத்துறையூரிலிருந்த சகலாகம பண்டிதரும் மெய்கண்டார்தம் சிவஞானபோதப் பெருமையைக் கேள்வியுற்று திருவெண்ணெய் நல்லூருக்கு வந்தார்.

''தம்மால் தோன்றியவர் தானே' இவரிடம் அப்படி என்ன ஞானம் சுடர்விட்டு இருக்க முடியுட்'' என்று ஆணவம் கொண்ட மனத்தால் சகலாகம பண்டிதர். மெய்கண்டாரைத் தாமே நேரில் வந்து

காணாமல், தம்மாணவரில் ஒருவரை மெய்கண்டாரைக் கண்டு வருமாறு கூறி அனுப்பி வைத்தார். அம்மாணவர் மெய்கண்டாரைக் கண்டவுடன் அவரே தஞ்சமென அவருடைய ஞானஉபதேசம் பெற்று அங்கேயே இருந்து விட்டார். தம்முடையமற்ற மாணவர்களையும் ஒருவர்பின் ஒருவராக சகலாகம பண்டிதர் அனுப்ப, மெய்கண்டாரை நாடி வந்த அம்மாணவர்கள் எல்லோருமே அவரைக் கண்டதும் அவர்திருவடி நிழலே தஞ்சமெனத் தங்கி விட்டார்கள்.

இதனால் ஆத்திரமும், ஆணவமும் அதிகமான சகலாகம பண்டிதர் தாமே நேரில் சென்று நிலையுணரும் வகையில் மெய்கண்டார் ஆதீனத்திற்கு வந்து நின்றார். அப்பொழுது மெய்கண்டாரும் தம் மாணவர்களுக்கு ஆணவமலத்தைப் பற்றிய பாடத்தை மாணவர்களுக்குப் போதித்துக் கொண்டிருந்தார்.

சகலாகம பண்டிதர் இடைமறித்து நம் மெய்கண்டாரிடம் ''ஆணவமலத்தின் சொரூபம் எப்படி இருக்கும்?'' என்று கேட்க ''இப்படி இருக்கும்'' என்று கூறுவது போல ஆணவ மலமே வடிவமாக நின்ற சகலாகம பண்டிதரையே சுட்டி விடையிறுத்தார் அருள்வள்ளலாகிய நம் மெய்கண்ட சிவம் அவர்கள்.

உண்மையில் அதுகாறும் ஆணவமலமே தம்மைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருப்பதை உணர்ந்த சகலாகம பண்டிதரும் மெய்கண்டாரின் திருவடிகளைப் பணிந்தார்; ஆணவம் அகன்றார்; தம்மால் தோன்றியவர் அல்லர் இவர்; எல்லாமாக விளங்குகின்ற இறைவரால் வந்த இறையருட் செல்வர்; சிவஞானச் செம்மல் என்பதைத் தெளிந்து ''தம்மையும் மாணவராக ஏற்க'' வேண்டும் எனத் தாள் பணிந்தார்; மெய்கண்ட சிவத்தின் 49 மாணவர்களில் தலைமாணவராகி உய்ந்த சகலாகம பண்டிதர் அது முதல் ''அருள்நந்திசிவம்'' எனும் தீட்சாநாமம் பெற்று விளங்கிச் சிவஞான போதத்திற்கு வழிநூலாகச் சிவஞான சித்தியார் எனும் நூலை அருளிச் சிறப்புற்றார்.

இவ்வாறு தாம் செய்துள்ள ''சிவஞான சித்தியார்'' நூலில் தாம் தம் குருநாதர் மெய்கண்ட சிவத்தின் பெருமையைப் போற்றி ''காசினிமேல் வந்த அருட்கதிரோன்'' எனவும் ''மெய்கண்ட தேவன் மிகுசைவநாதன்'' எனவும் போற்றியுள்ளார் அருள் நந்திசிவம்.

உள்ளத்தாமரை மொட்டவிழ, சிவமணம் எங்கும் பரந்து மணம் வீச, ஞானத்தேன் ஒழுக, மறைவண்டுகள் சூழும்படியாக, காசினிமேல் வந்த அருட்கதிரோன் என்று அருணந்தி சிவம் மெய்கண்ட சிவத்தைப் போற்றியுள்ள சிவஞானசித்தியார் பாடல் பின் வருமாறு:

''பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்ட இருதயகமல முகைகள் எல்லாம்
கண்திறப்பக் காசினிமேல் வந்த அருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய்மேவு
மெய்கண்ட தேவன் மிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்''

இவ்வாறு வையம் போற்றவும் நம் சைவ சமயம் உய்யவும் சிவஞானபோதத் தெள்ளமுதை வாரிவழங்கிய மெய்ஞ்ஞானவள்ளலே நம் மெய்கண்ட சிவம் ஆவார்.

*12 சூத்திரங்களில் 40 அடிகளில் 216 சொற்களில 624 எழுத்துக்களில் உலகமெலாம் வியக்கத் தக்க சைவசித்தாந்தக் கருவூலத்தை வழங்கியுள்ள மெய்கண்டார் பெருமையை ஞாலத்திலுள்ள தத்துவ ஞானிகள் எல்லாம் போற்றிக்கொண்டாடுகிறார்கள்.*

சிவஞானபோதத்தில் அமைந்துவிளங்கும் அப்பன்னிரண்டு சூத்திரங்கள் பின்வருமாறு:

### மங்கல வாழ்த்து

கல்லால் நிழல்மலை வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே

### அவையடக்கம்

தம்மை உணர்ந்து தமையுடைய தன்உணர்வார்
எம்மை உடைமை எமைஇகழார் - தம்மை
உணரார் உணரார் உடங்கியைந்து தம்மில்
புணராமை கேளாம் புறன்.

### பதியுண்மை

அவன் அவள் அதுஎனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துஉளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர் 1.



பாச உண்மை

அவையே தானே ஆயிரு வினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்க மின்றி நிற்கும் அன்றே 2

பசு உண்மை

உளது இலது என்றலின் எனதுஉடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படில்
உண்டிவினை இன்மையின் உணர்த்த
உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா 3

பசுஇலக்கணம்

அந்தக் கரணம் அவற்றின் ஒன் றன்று, அவை
சந்தித்தது ஆன்மா சகசமலந்து உணராது
அமைச்சு அரசு ஏய்ப்ப நின்று
அஞ்சுஅவத் தைத்தே 4

பாச இலக்கணம்

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்து அறிந்து அறியா, ஆங்கவை போலத்
தாம்தம் உணர்வின் தமிஅருள்
காந்தம் கண்ட பசாசத்த அவையே 5

பதி இலக்கணம்

உணர்உரு அசத்து எனின் உணராதது
இன்மையின்
இருதிறன் அல்லது சிவசத்தாம் என
இரண்டு வகையின் இசைக்குமன் உலகே 6

சாதகன் இயல்பு

யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்
சத்தே அறியாது அசந்துஇலது அறியாது
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா 7

ஞானசொருபம்

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில்
உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல்
செலுமே 8

சாதகமுறை

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினில் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்து எனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதி, விதி எண்ணும்
அஞ்செழுத்தே 9

பெத்த நீக்கம்

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலம்மாயை தன்னொடு வல்வினை
இன்றே 10

முத்திப் பயன்

காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம் போல
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே 11

சீவன் முத்திநிலை

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன் எனத் தொழுமே 12

# "அழுதால் உன்னைப் பெறலாமே"

— சேது. சிவா

'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடந்தன்னில்' என்பது பழமொழி. குழந்தையை, 'கண்ணே, மணியே, பொன்னே' என்று அன்புடன் அழைத்துக் கொஞ்சினால், வந்து மேலேவிழும்; ஒட்டிக்கொள்ளும்; சுற்றிச் சுற்றி விளையாடும். குழந்தை தான் விரும்பியதனைக் கேட்டு அழ ஆரம் பித்தால் அப்பொருள் அதன் கைக்குக் கிடைக்கும் வரை அழுகையை நிறுத்தாது. இது உலக வாழ்க்கை யில் எல்லோரும் அனுபவிக்கும் உண்மை.

அதே போன்று, தெய்வத்தினை உள்ளம் நிறைந்த அன்புடன் வணங்கித் தொண்டுகள் செய்து, புகழ்ந்து போற்றினால் அத் தெய்வம் நம்மிடம் வரும். எப்படி குழந்தைதான் விரும்பியதனை அடை யும் வரை அழுகையை நிறுத்தாதோ அதேபோன்று தெய்வத்தின் அருள் கிடைக்கவில்லையே என்று நெக்கு நெக்குள் உருகிக் கண்ணீர் விட்டால் நிச்சயம் தெய்வம் அருள் செய்யும்; காட்சி கொடுக்கும்.

மாணிக்கவாசகர், தான் பொய்யன் என்றும், தன் உள்ளமும், தன் அன்பும் பொய்யானவை என்றும் கூறி இருப்பினும் தீவினையுடைய தான் இறைவனை நினைந்து அழுதால் அவனைப் பெற்று விடலாம்' என்று தான் பெற்ற அனுபவத்தினைப் பாடுகின்றார்.

"யானே பொய் என் நெஞ்சம் பொய் என் அன்பும்
பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப்
பெறலாமே".

மக்களில் பெரும்பாலானவர்கள் திருக்கோயி லுக்குச் சென்று சுவாமி திருமுன்பு தங்களுடைய பொருள்நிலை, நோய் மற்றும் இதர உலகியல் துன்பங்களைக் கூறி அழுகின்றார்கள். துன்பங்களுக் காக அழுவதனை வீட்டில் இருந்துகொண்டே அழ லாமே! வேண்டத் தக்கது அறிவோனாகிய இறைவன் திருமுன்பு உலகியல் துன்பங்களுக்கு அழலாகுமா?

'பொற்சபையில் ஆடும் மன்னவனே! உன் னுடைய திருவருள் கொடுப்பதற்கு என்மீது இன்னும் இரக்கம் கொள்ளவில்லையே என்று அழுவதனைத் தவிர வேறு என்ன செய்வேன்' என்று அழுகின்றார். மணிவாசகர்.

"............ அருள் தந்திருக்க
இரங்கும் கொல்லோ என்று
அழுதுமதுவே அன்றி மற்று என் செய்வேன்
பொன்னம்பலத்து அரைசே".

'இந்த மண்ணுலகத்தில் மயக்கம் கொண்டு உள்ளேனே என்று எண்ணி, கண்களில் நீர் வழிய உள்ளுருகி, மயிர்க்கால் கூச்செரிய அன்புடன் இருப்பது என்றோ' என்று வருந்துகின்றார்.

"......... பெருமாநிலத்தில்
அருமால் உற்றேன் என்று என்று
சொரிந்த கண்ணீர் சொரிய உள்நீர்
உரோமம் சிலிர்ப்ப உகந்து அன்பாய்ப்
புரிந்து நிற்பது என்று கொல்லோ".

ஒப்பற்ற தனித்தன்மையுடைய இறைவனை நோக்கி உடல்பூரிக்க, தொண்டை கம்ம, கண்கள் அருவியாக நீர் சொரியக் கைகளால் வணங்கி, நறுமலர்களால் திருமேனி சொரியக் கைகளால் வணங்கி, நறுமலர்களால் திருமேனியை அழகு செய்வது என்றோ" என்று உருகுகின்றார்.

" தனை ஒப்பாரை இல்லாத் தனியை
நோக்கித் தழைத்துதழுத்த கண்டம்
கனையக் கண்ணீர் அருவிபாயக்
கடிமலரால் புனையப் பெறுவது
என்று கொல்லோ"

சிவபெருமானின் அருளைப் பெறுவதற்கு அடியார்கள் எவ்வாறு உள்ளார்கள் என்று, மாணிக்க வாசகராக கூர்ந்து கவனிக்கின்றார்.

விண்ணவர்களுக்கு மருந்து போன்றவனை, வேதம் கூறும் மேலான பொருளானவனை, கண் களுக்கு இனிய காட்சி தருபவனைப் பாடி அழுது மனம் முழுமையும் கனியும்படி உருகுகின்றார்களாம்.

"விண்ணுக்கு ஒருமருந்தை
வேத விழுப்பொருளைக்
கண்ணுக்கு இனியானைப் பாடி
கசிந்து உள்ளம்
உள்நெஞ்சு நின்று உருக"

சிவபெருமானிடம் அன்பு கொண்ட ஒரு பெண் அடியார், ஒவ்வொரு நிலையிலும் தன் தலைவன் என்று அவனுடைய புகழை வாய் ஓயாமல் கூறி, மகிழ்ச்சி கொண்டு கண்கள் நீரை நிறுத்தாது சொரிந்திட, பூமியில் விழுநது வணங்கி, மற்ற தேவர்களை வழிபடாமல் தேவதேவனாகிய சிவனிடம் பித்துக் கொண்ட நிலையில் இருக் கின்றாளாம்.

''ஓரொருகால் எம்பெருமான்
என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள்
சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை
கண் பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள்
விண்ணோரைத் தான் பணியாள்
பேரரையற்கு இங்ஙனே பித்தொருவர்
ஆமாறும்''

மேலும் சில அடியார்கள் ஆளுக்கு ஒரு பக்கமாக வீணையில் இனிய ஓசையை எழுப்பிக் கொண்டும், யாழினை மீட்டிக் கொண்டும், மலர் மாலைகளைக் கையிற் பிடித்துக்கொண்டும், தொழுது கொண்டும், அழுதுகொண்டும், தலையிற் கைகளைக் கூப்பி வணங்கிக் கொண்டும், சிவனின் அருளைப் பெற ஏங்குகின்றார்களாம்.

''இன்னிசை வீணையர்
யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம்
இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க்
கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர்
துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி
கூப்பினர் ஒருபால்''

அடியாாகள் அனைவரும் உள்ளம் உருக, உடல் நடுங்க, கண்கள் அருவி சொரிய, வாழ்த்தி வணங்கி, சிவபெருமான் அருளுக்கு ஏங்கிக் கிடக்கும் பொழுது, தான் அப்படி இல்லையே என்று வருந்துகின்றார்.

கால்முதல் தலைவரை உள்ளம் விரிந்து உருகவில்லையே, உடல் முழுமையும் கண்ணாக இருந்து கண்ணீர் வெள்ளம் பாய்ச்சவில்லையே, தீவினையுடைய தன் நெஞ்சம் கல்லாகவும், கண் இரண்டும், மரத்தின் கண் போன்றும் உள்ளதே என்று புலம்புகின்றார்.

''உள்ளம் தாள் நின்று உச்சி
அளவும் நெஞ்சாய்
உருகாததால் உடம்பு எல்லாம்
கண்ணாய் அண்ணா!
வெள்ளம்தான் பாயாதால்
நெஞ்சம் கல்லாம்
கண் இணையும் மரமாம்
தீவினையினேற்கே''

சிவபெருமான் தாய் போல் ஆதரிக்க வேண்டும் என்றால், தான் கொண்ட கொள்கையை அலுத்து விட்டு விடாமல், அனலிற்பட்ட மெழுகு போல் உள்ளம் உருகி அழுது, உடல் நடுங்க, மகிழ்ச்சியில் ஆடியும், ஓலமிட்டும் வாழ்த்தியும் வணங்கியும், எலும்பு உருகவும், ஐம்பொறிகளும் ஒன்றி வாய் குழற, மயிர்க்கூச்செறிய நெஞ்சம் விரியக் கைகுவித்து கண்கள் மகிழ்ச்சியினால் நீர்த் துளி களைச் சிந்த நிலையான பேரன்பினை நாளும் வளர்த் தால் அவன் ஒப்பில்லாத தாய் ஆக வந்து பாதுகாப்பான் என்று மாணிக்கவாசகர் பாடுகின்றார்.

''தப்பாமே தாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்
தொழுது உளமுருகி அழுதுடல் கம்பித்து
ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்
..............................................
என்பு நைந்துருகி நெக்கு நெக்கு ஏங்கி
அன்பு எனும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாத என்று அரற்றி
உரை தடுமாறி உரோமம் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித்து இருதயம் மலரக்
கண்முன் களிகூர நுண்துளி அரும்பச்
சாயா அன்பினை நாள்தொறும்
தழைப்பவர்
தாயே ஆகி வளர்த்தனை''.

'யானேதும் பிறப்பஞ்சேன்',' யாமார்க்கும் குடியல்லோம் யாதும் அஞ்சோம்' என்று இறுமாந்து கூறிய மாணிக்கவாசகர், பிறைசூடிய பெருமானை எண்ணி, கண்ணீர் வார வழிபடமாட்டாதாராகிய ஆண்மை உடையவர் அல்லாதாரை பார்த்தால் அஞ்சுவதாக கூறுகின்றார்.

''நீர்நிலா அணியினானை நினைந்து
நைந்து உருகி நெக்கு
வாள் நிலாம் கண்கள் சோர
வாழ்த்திநின்று ஏத்தமாட்டா
ஆண் அலா தவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே'',

சிவபெருமானைத்தன் தலைவராகக் கருத்தில் கொண்ட பெண் ஒருத்தி தன் தாயிடம், 'அப்பெருமான் கண்களில் தீட்டிய மையினை உடையவர், அருட் கடலானவர், வற்றாத மகிழ்ச்சிக் கண்ணீர் வரச் செய்பவர்' என்று கூறுவதாக மாணிக்கவாசகர் பாடு கின்றார்.

''கண் அஞ்சனத்தர் கருணைக் கடலினர்
உள் நின்று உருக்குவர் அன்னே என்னும்
உள் நின்று உருக்கி உலப்பிலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே என்னும்''

முன்னோர்களாகிய தமிழ்ப் பெருமக்கள் தங்களின் வாழ்க்கையில் அறிந்து கொண்ட இறை அனுபவத்தினை, உலகியல் வாழ்க்கையுடன் இயைந்த பழமொழிகளாக, மறைமுகமாகக் கூறிவிட்டனர். 'அழுத பிள்ளை பால் குடிக்கும்'' என்று ஒரு பழமொழி. இது உலக வாழ்க்கையில் குழந்தை அழுதால் அதற்குப் பால் கொடுக்கப்படும் என்பதனைக் குறிக்கும். இதில் மறைமுகமாக ஒரு இறையுண்மையினையும் கூறி உள்ளனர்.

யோக நெறியில் மூலாதாரத்தில் உள்ள கனலை எழுப்பி மற்ற ஆதாரங்களில் செலுத்தி, சமாதி நிலையில் பிரமரந்திரத்தில் புகவிட்டால், அங்கிருந்து அமுததாரை சொட்டும், உடல் புளகாங்கிதம் அடையும், கண்கள் நீர் சொரியும் என்று கூறப்படுகின்றது. இந்த உண்மையை மறைவாக உலக வாழ்க்கையுடன் கூடிய பழமொழியாகக் கூறிவிட்டார்கள். இதனையே குதம்பைச் சித்தரும், 'மாங்காய்ப் பால் உண்டு மலைமேல் இருப்போர்க்குத் தேங்காய்ப் பால் ஏதுக்கடி குதம்பாய்' என்று பாடி உள்ளார்.

திருத்தோணிபுரத்துப் பொய்கைக் கரையில் ' 'தம் மேலைச் சார்புணர்ந்தோ, சாரும் பிள்ளைமை'த் தன்மையினாலோ திருக்கோயில் சிகரம் பார்த்து 'அம்மே அப்பா' என்று திருஞான சம்பந்தர் அழவும், சிவபெருமான் பார்வதியுடன் காளை வாகனத்தில் எழுந்தருளிக் காட்சி கொடுத்து அம்மையை நோக்கி 'பாலடிசில் கொடு' என்று கூறவும், அம்மை திருமுலைப்பாலில் சிவஞானம் குழைத்து வள்ளத்தில் கொடுத்தார். அழுதார் சம்பந்தர். அடைந்தார் சிவஞானம். மேற்கூறிய பழமொழி இந்த வரலாற்றையும் உட்கொண்டதாக உள்ளது.

திருநாவுக்கரசர், 'பஞ்சு போன்ற திருவடிகளை உடைய உமையைப் பாகமாக உடைவரே என்று பயந்து, புதிய மலர்களால் அருச்சித்து அழுவீர்கள் ஆகில் வான்மியூர் ஈசன் ஐம்பொறிகளின் வஞ்சனையை நீக்குவார்' என்று பாடுகின்றார்.

''நெஞ்சில் ஐவர் நினைக்க நினைக்கிறார்
பஞ்சின் மெல்லடி யாளுமை பங்கவென்று
அஞ்சி நாண்மலர் தூவி அழுதிரேல்
வஞ்சம் தீர்த்திடும் வான்மியூர் ஈசனே''

ஒன்பது வாயில்களைக் கொண்ட உடம்பினைக் கழுகு அரித்துத் தின்னும் முன் - இறப்பதற்கு முன் - திருவடிகளை வணங்கித் தூயமலர்களால் தூவிநின்று அழுகின்ற அன்பர்களுக்கு ஆனைக்கா அண்ணல் அன்பினால் அருள்புரிவார் என்று அவர் மேலும் பாடுகின்றார்.

''ஒழுகு மாடத்துள் ஒன்பது வாய்தலும்
கழுகு அரிப்பதன் முன்னம் கழலடி
தொழுது கைகளால் தூமலர் தூவிநின்று
அழும் அவர்க்கு அன்பன் ஆனைக்கா
அண்ணலே''

திருமாற்பேறு இறைவன் திருப்பெயரை மகிழ்ச்சியுடன் கூறி அன்புடன் அழுது தொழக் கூடியவர்களுக்குத் துன்பம் இல்லை என்றும் அவர் பாடுகின்றார்.

''மழுவலான் திருநாமம் மகிழ்ந்து உரைத்து
அழுவவார்களுக்கு அன்பு செய்து
இன்பொடும்
வழுவிலா அருள் செய்தவன் மாற்பேறு
தொழவலார் தமக்கு இல்லை துயரமே''

நீச்சல் பழக வேண்டும் என்று கரையில் உட்கார்ந்துகொண்டு ஆசைப்படுவதனால் பழகிவிட முடியாது. தண்ணீரில் இறங்கிக் கைகால்களை உதறிப் பயிற்சி செய்தால் பழகிவிடலாம்.

அதே போன்று, ஆண்டவன் அருளைப் பெறவேண்டும் என்று ஆசைப்படுவதனால் மட்டும் பெற்றுவிடமுடியாது. ஆலயம் செல்லவேண்டும். அவனை வழிபடவேண்டும். அவனின் பெருமைகளையும் புகழையும் பாடவேண்டும். பாடிப் பாடி உள்ளம் உருக வேண்டும். அழவேண்டும். அப்படிச் செய்தால் அவனுடைய அருளைப் பெற்று விடலாம்.

உள்ளம் குழைந்து குழைந்து உருகி, நின்றும், அமர்ந்தும், எழுந்தும், கிடந்தும், சிரித்தும், அழுதும், வணங்கியும், வாழ்த்தியும், மகிழ்ச்சியினால் பல விதமாக ஆடியும் இருந்தால் செவ்வானம் போன்ற திருமேனி தோன்றும்

''நெக்கு நெக்குள் உருகி உருகி
நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதும் தொழுதும் வாழ்த்தி
நானா விதத்தால் கூத்தும் நவிற்றிச்
செக்கர் போலும் திருமேனி திகழ''

என்று தான் கண்டறிந்த உண்மையை மாணிக்க வாசகர் மக்களுக்கு அறிவிக்கும் முகத்தான் 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்கின்ற மணிவாசகம் அருளி உள்ளார்.

# பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே

— டாக்டர் இரா. கு. நாகு

ஆழ்வார்களையும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களையும் புகழ்நதுரைத்த சான்றோர்கள் பலராவர். அவர்களுள் ஒருவர் 'அப்பிள்ளை' என்பவராவார். அவர் பாடியவை ஆழ்வார்கள் வாழித் திருநாமம் என்னுந் தலைப்பிலமைந்த இருபத்தைந்து பாடல்கள். அப்பாடல்களின் நோக்கம், 'வேதந் தமிழ் செய்த' ஆழ்வார்களைப்பற்றிப் புகழ்ந்து பாடுவதேயாகும். அப்பாடல்களுள் ஆழ்வார்கள் பன்னிருவர் பற்றிய குறிப்புகள் இருக்கும்; அந்த ஆழ்வார்கள் மண்ணுலகில் தோன்றிய மாதம், நாள் பற்றிய தகவல்கள் இருக்கும்; ஆழ்வார்கள் வாழ்வோடு தொடர்புடைய பலவும் குறிப்பாக அவற்றுள் வெளிப்படுத்தப் பெற்றிருக்கும்; அவை ஆழ்வார்களையும் ஆழ்வார்தம் அருளிச் செயல்களையும் விளக்கமாகப் பிறநூல்களில் கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுவது போல் அமைந்து இருக்கும்; வாழையடி வாழையாக வைணவப் பெரியார்களிடையே வழங்கி வந்து கொண்டிருக்கும் சில ஐதிகங்களையோ நடைமுறைகளையோ அவை இலைமறை காயாக வைத்துக் கொண்டிருக்கும்.

அப்பிள்ளை திருவாய் மலர்ந்தருளிய ஆழ்வார்கள் வாழித்திருநாமம் என்னும் பாடல்தொகுதி,

''வேதத்தி னுறுபொருளைத் தமிழால் நாளும்
விளங்கியிடப் பன்னிருவர் வந்து தோன்றும்
மாதத்தை யவரவர்க ளுதித்த நாளை
வாழ்பதியைக் கலைத் தொகையை
மனத்தில் வைத்துப்
போதத்தைத் தருந்தமிழால் வாழி நாமம்''

பூதலத்தில்'' பேசும். அவ்வாறு பேசும் தொகுதியில் ஒரு பாடலுள் பயின்றுவரும் தொடர்தான் **'பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே'** என்பதாகும். அத்தொடர் உணர்த்தும் பொருளையும் அதனுள் படிந்து கிடக்கும் ஐதிகத்தையும் வெளிக் கொணர்வதுதான் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆழ்வார்களை வாழ்த் திப்பாடும் 'வாழித்திருநாமத்தில்' அப்பிள்ளை 'ஆண்டாளை' ஒரு பாடலில் வாழ்த்திப் புாடுகிறார். அப்பாடல் வருமாறு.

**திருவாடிப் பூரத்தில் செகத்துதித்தாள் வாழியே**
**திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே**
**பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே**
**பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே**
**ஒருநூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே**
**உயரரங்கர்க்கே கண்ணி யுகந்தளித்தாள் வாழியே**
**மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே**
**வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே.**

மேலே காட்டியுள்ள பாடலில் ஆண்டாள் வரலாறு உள்ளது. இன்றுள்ள விருதுநகர் மாவட்டத்திலுள்ள திருவில்லிப் புத்தூரில் ஆண்டாள் அவதரித்தாள். அவள் வாழ்ந்த காலத்தில் திருவில்லிப் புத்தூருக்குப் புதுவை(நகர்) என்ற பெயர் வழங்கி வந்திருக்கிறது. அந்த நகரைச் சுற்றியுள்ள நிலப் பரப்பை அன்று 'மல்லிநாடு' என அழைத்திருக்கின்றனர்.

மல்லி நாட்டிலுள்ள புதுவை நகரில் ஆண்டாள் ஆடிமாதத்தில் பூர நன்னாளில் தோன்றினாள் என்பதும், அவள் முப்பது பாடல்களைக் கொண்ட திருப்பாவை என்னும் ஒப்புயர்வற்ற பாவை இலக்கியம் செய்தளித்தாள் என்பதும், அவள் மேலும் நூற்று நாற்பத்து மூன்று பாடல்களைக் கொண்ட நாச்சியார் திருமொழி என்னும் நல்லிலக்கியத்தை நமக்கு நல்கிச் சென்றுள்ளாள் என்பதும் மேற்காட்டியுள்ள பாடலடிகளால் உய்த்துணர்கின்றோம்.

அப்பாடலில் ஆண்டாள் பெரியாழ்வார் மகளாக வாழ்ந்த வரலாற்றையும், அரங்க நகர்

அப்பனுக்கு ஆண்டாள் அகங்குளிர மாலைசூட்டி மகிழ்ந்தாள் என்னும் வரலாற்றையும் உணர் கிறோம்.

அப்பாடலில் பயின்றுவரும் 'பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே' என்பது சிந்தனைக்குரிய தொடராக உள்ளது. அந்த அடியில் இலைமறை காயாக இருப்பது யாது? வைணவ மரபு அறிந்தவர்களுக்கு அதன் பொருள் எளிதே; ஆனால் மரபு அறியாதவர்களுக்கு அதன் பொருள் அரிதே யாகும்.

'பெரும்பூதூர் மாமுனி' என்ற தொடர் ஸ்ரீபெரும்புதூரில் பிறந்து வைணவ நெறியை வளர்த்த இராமாநுசரைக் குறிக்கும் அப்பிள்ளை, இராமநுசரைப் பாடும் பொழுது.

**'அத்திகிரி யருளாள ரடிபணிந்தோன்' - என்றும்**
**'அருட்கச்சி நம்பியுரை யாறு பெற்றோன்' - என்றும்**
**'பத்தியுடன் பாடியத்தைப் பகர்ந்திட்டோன்' - என்றும்**
**'பதின்மர் கலையுட் பொருளைப் பரிந்து கற்றோன்' - என்றும்**
**'சுந்தமகிழ் மாறனடி தொழுதுய்ந்தோன்' - என்றும்**
**'தொல்பெரிய நம்பி சரண் தோன்றினான்' - என்றும்**
**'சித்திரையி லாதிரை நாள் சிறக்கவந்தோன்' என்றும்**
**'சீர் பெரும்பூதூர் முனிவன்' - என்றும்**

புகழ்ந்து பாடியுள்ளார். காஞ்சி மாநகரிலிருந்து அரு ளாட்சி புரியும் பேரருளாளப் பெருமான் திருவடி பணிந்து வாழ்ந்தவர் இராமாநுசர் என்றும், அவர் திருக்கச்சிநம்பி என்பவரிடம் 'ஆறுவார்த்தைகள்' கேட்டவர் என்றும், அந்த இராமாநுசரே விசிஷ்டாத் வைத நெறிக்கேற்பப் பிரம்மசூத்திரத்திற்குப் பேருரை தந்தவர் என்றும் கூறியுள்ளார். இராமாநுஜர் ஆழ்வார் பாசுரங்களைப் பாடிப் பரவியவர் என்றும், நம் மாழ்வார் திருவடிகளைத தொழுது வாழ்ச்சி பெற்ற வர் என்றும், பெரிய நம்பியை ஆச்சாரியராக ஏற்று வாழ்ந்தவர் என்றும் அந்த இராமாநுசர் இன்றுள்ள செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள திருப்பெரும்பூதூ ரில் சித்திரை மாதத்தில் திருவாதிரை நன்னாளில் பிறந்தவர் என்றும் 'அப்பிள்ளை' ராமாநுசரைப் பற்றிக் குறித்துள்ளார்.

'காரேய் கருணை இராமாநுச' என்று வைணவப் பெரியார்களால் போற்றப்பெறும் 'பெரும்புதூர் மாமுனி' ஆண்டாளுக்கு அண்ண னாகிய வர லாற்றைப் ''பெரும்புதூர் மாமுனிக்குப் பின்னானாள்'' என்கிறார் அப்பிள்ளை. இந்த உறவு எப்படி வந்தது? இக்கூற்று எவ்வாறு பொருந்தும்? - என்பன வினாக்கள் இவ்வினாக்களுக்கான விடையை இனிக்காண்போம்.

'பெரும்பூதூர் மாமுனி' என்றழைக்கப்பெறும் இராமாநுசர் வாழ்ந்த காலம் கி.பி. பதினோராம் நூற்றாண்டாகும். 'இராமாநுசர் சக ஆண்டு 939-இல் (கலி ஆண்டு 4118; கி.பி. 1017) வியாழக்கிழமை, சித்திரை 12-ஆம் தேதி, சுக்லபட்சப் பஞ்சமியில் கதிரவன் கர்க்கடக ராசியில் இருந்த பொழுது, பிங்கள ஆண்டில் அவதரித்தார்' என்பர். பதினோராம் நூற் றாண்டில் பிறந்து பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை இருந்து 120 ஆண்டுகள் வாழ்ந்தவர் என்பர். அத்தகைய பெரியார் கி.பி. எட்டாம் நூற் றாண்டின் இறுதிக்காலப்பகுதியில் தோன்றிய ஆண்டாளுக்கு அண்ணன் என்று சொல்லப்பெற்று வருவதற்கான காரணம் யாது? முன்பிறந்த ஒருத் திக்குப் பின்பிறந்த ஒருவர் அண்ணனாகக் கருதப் பெற்று வருவதற்கான காரணம் யாதாக இருக்கலாம் என்பது வினா. காலத்தால் இராமாநுசர் ஆண்டா ளுக்குப் பிற்பட்டவரே; இதில் ஐயமில்லை. ஆனால் பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள்' எனக் கூறுவதற்குக் காரணமாய் அமைந்தது ஒரு நிகழ்ச் சியே. அந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் இராமாநுசர் ஆண்டாளுக்கு அண்ணனாகி விட்டார் என்பது தொன்றுதொட்டுக் கூறப் பெற்றுவரும் வரலாறாகும். அந்த நிகழ்ச்சிக்கு வருமுன்னர் ஆண்டாளின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்ள வேண்டி யது இன்றியமையாததாகும்.

திருவில்லிபுத்தூரில் பெரியாழ்வார் என்னும் திருமாலடியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் அங்குள்ள பெருமாளுக்கு நாள்தோறும் பூமாலை கட்டிக்கொடுக்கும் தொண்டில் ஈடுபட்டிருந்தார். அவர் திருமகளாக இவ்வுலகில் தோன்றியவர் ஆண்டாள்.

வைகுந்தத்தில் பெருமாளுடன் இருந்த மண் மகளே திருவில்லிப்புத்தூரில் பெரியாழ்வாரின் தோட்டத்தில் துளசிச் செடியின் அடியில் சிறு குழந்தையாகக் கிடந்தாள் என்றும் குழந்தைப்பேறு இல்லாமல் வாழ்ந்து கொண்டிருந்த பெரியாழ் வார் துளசிச்செடியின் அடியில் (கற்றைவார் குழ லோடு) கரியமயிர்ச்செறிந்த தலையோடு கிடந்த அக்குழந்தையை எடுத்துக் 'கோதை' என்று திரு நாமம் சாத்தி அவளை மிக்க அன்புடன் வளர்த்து வந்தார் என்றும் கூறுவர். பூமிப்பிராட்டியின் அம்ச மாக, ஒரு தாயின் வயிற்றில் கருவாக இருந்து

உருவாகாமல் தோற்றம் செய்தவள் ஆண்டாள் என்பது வைணவச் செல்வர்களின் நம்பிக்கை.

திருமாலை வழிபடும் திருக்குலத்தில் வாழும் பேறுபெற்ற ஆண்டாள், இளமைமுதல் திருமால் வழிபாட்டில் தன்னை ஈடுபடுத்தினாள். திருமால் பெருமைகளையே கேட்டும் பேசியும் பாடியும் பரவியும் வாழ்ந்த ஆண்டாள், திருமாலையே மணாளனாக மனத்துள் கொண்டு ஒழுகினாள்.

ஆண்டாளின் மனத்துள் இருப்பதைப் பெரியாழ்வார் அறிந்தாரில்லை; அவர் அறிந்ததெல்லாம் விஷ்ணுவையே! விஷ்ணுவைச் சித்தத்தில் வைத்து வாழ்ந்ததால் அவர் விஷ்ணுசித்தர் என அழைக்கப் பெற்றார். அவர் நாள்தோறும் வடபெருங்கோயிலுடையானாகிய பெருமானுக்கு மாலை கட்டித் தருவார். அவர் கட்டிவைத்திருக்கும் மாலையைக் கோதை அவருக்குத் தெரியாமல் தான் சாத்தி மகிழ்வாள். பின்னர் கழற்றி வைத்துவிடுவாள்.

ஒரு நாள் விஷ்ணு சித்தர் மாலைகட்டி வைத்துவிட்டு அதைக் கோயிலுக்கு அனுப்புமுன்னர் வெளியே சென்றிருந்தார். அவர் வெளியே போயிருக்கும் பொழுது அந்த மாலையை எடுத்து ஆண்டாள் தான் அணிந்து வழக்கம்போல் அழகுபார்த்தாள். அப்பொழுது வெளியே சென்றிருந்த பெரியாழ்வார் வந்துவிட்டார்; மகள் செய்த செயலால் மனம் வருந்தி வேறு மாலைகட்டி அன்றைய வழிபாட்டிற்கு அனுப்பினார். மகளைக் கடிந்தார்; மனம் கலங்கினார். அதனால், அன்று தூக்கமின்றித் தவித்துப் பின்னர் ஒருவாறு தூங்கினார். தூக்கத்தில் கனவில் வடபெருங்கோயில் இறைவன் ஆண்டாள் அணிந்துகொடுக்கும் மாலையே தனக்கு உகப்பானது என்று பெரியாழ்வாருக்கு உணர்த்த, அன்றுமுதல் 'எம் பெருமானின் தேவியர்களுள் ஒருத்தியே' தன்மகள் என்று தெளிந்து, கோதையாக வந்து இருப்பவள் இறைவனையே ஆண்டவள் ஆதலால் 'ஆண்டாள்' எனக் கொண்டாடினார்; சூடிக்கொடுத்த சுடர்க்கொடி எனப் பெருமிதம் கொண்டார்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக ஆண்டாள் வளர்ந்தாள்; மணப்பருவம் அடைந்தாள். பெரியாழ்வார் ஆண்டாளுக்கு மணமகன் தேடினார். அதை அறிந்த ஆண்டாள் மானிடரை மணக்கமாட்டேன் என்றும் 'திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையில் அடிவருடப்பள்ளி கொள்ளும்' அழகிய மணவாளனையே மணப்பேன் என்றும் கூறினாள்.

ஆண்டாளின் குறிக்கோளைக் கேட்டுப் பெரியாழ்வார் செய்வதறியாது திகைத்தார்; கலங்கினார். அரங்கநகர் இறைவன் அவர் கனவில்தோன்றி ஆண்டாளைத் திருவரங்கத்திற்குள் கொண்டுவந்து சேர்க்குமாறு சொன்னதோடமையாது திருவரங்கத்திலிருந்து ஆண்டாளைப் பல்லக்கில் அழைத்துவரத் தன் பரிசனங்களையும் அனுப்பினார். பரிசனங்கள் சென்றனர்; ஆண்டாள் வந்தாள் அரங்கனோடு கலந்தாள். இதுதான் ஆண்டாள் வரலாறு.

ஆண்டாள் இறைவனையே கணவனாக அடைய விரும்பியவளாதலால் தன் விருப்பத்தை நிறைவேற்றப் பல செயல்களில் ஈடுபட்டாள். கண்ணன் என்னும் கருந்தெய்வத்தைக் கணவனாக அடையப் பாவை நோன்பு நோற்றாள்; வேங்கடத்துக் கண்ணனைப் பெற மன்மதனை வழிபட்டாள்; இறைவனை மணாளனாக அடைய நோன்பிருந்தாள்; கூடல் இழைத்தாள்; கனவுகண்டாள்; பனிநீராடினாள்; மேகத்தைத் தூதுவிட்டாள்; செவிலித்தாயரிடமும் தோழியரிடத்தும் தான் இறைவன்பால் கொண்ட காதலைப் பலபடியாக எடுத்துக் கூறினாள்; கண்ணபிரான் நடமாடிய இடங்களுக்குத் தன்னைக் கொண்டுபோய் விட்டுவிடுமாறு வேண்டினாள். இவ்வாறு ஆண்டாள் தன்னை நாயகியாக்கி இறைவனாகிய நாயகனோடு கலந்துவாழப் பக்திப் பெருக்கில் மூழ்கினாள்; பரவசமுற்றுப் பாடிப் பரவினாள்.

ஆண்டாள் தன்னை நாயகியாகப் பாவித்துப் பாடிய காதற்பாக்கள் பலவற்றுள் 'சிந்துரச் செம்பொடி' என்று தொடங்கும் திருமொழி ஒன்பதாந் திருமொழியாகும். பிரிவிடைக் கலங்கும் நாயகியாகத் தன்னைப் பாவித்து ஆண்டாள் பாடிய பத்துப்பாடல்கள் அத்திருமொழியில் உள்ளன. அப் பாடல்களில் திருமாலிருஞ்சோலைப் பிரானை அடையத்துடிக்கும் துடிப்பு உள்ளது. திருமாலிருஞ்சோலையின் இயற்கை வளம் கண்ணனையே நினைப்பூட்டுவதுபோல் இருப்பதால் பிரிவுத்துயர் நாயகிக்கு மிகுதியாகிவிட்டது. கருவிளை யொண் மலர்களும் சாயாமலர்களும் திருமால் உருவொளி காட்டுவதால், காதல் வயப்பட்டு வாடித்தவிக்கும் தலைவி செய்வதறியாது திகைத்தாள்; அம் மலை மீது பறந்து திரியும் கருநிற வண்டுகளைக் கண்டபோதும், பூஞ்சுனைகளைக் கண்டபோதும் அச்சுனைகளுள் மலர்ந்திருக்கும் செந்தாமரைகளைப் பார்த்தபோதும் கண்ணனைப் பற்றிய நினைவு மிக அவற்றிடம் கண்ணனை அடைய வழிசொல்லுங்கள் எனச் சரணடைந்தாள். அந்த மனநிலையில்,



''நாறு நறும்பொழில் மாலிருஞ்சோலை
நம்பிக்கு நான்
நூறு தடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து
பராவி வைத்தேன்
நூறு தடாநிறைந்த அக்கார வடிசில் சொன்னேன்
ஏறு திருவுடையான் இன்றுவந்திவை
கொள்ளுங்கொலோ''

- என்று பாடினாள். நூறு அண்டா வெண்ணெயும் நூறு அண்டா அக்கார அடிசிலும் இறைவனுக்குத் தருவதாக வாயால் சொன்னாள். தான் இவ்வாறு வாயால் தருவதாகக் கூறிய இவற்றை இறைவன் வந்து ஏற்றுக் கொள்வாரா? ஏற்றுக் கொண்டு அவர் என் ஆவலைப் பூர்த்தி செய்வாரா? எனக் கேட்பது போல ஆண்டாள் பாடினாள். வாய்ப் பேச்சாக நின்றது.

ஆழ்வார்கள் அருளிச் செயலைப் பரப்புவதை இலட்சியமாகக் கொண்டுவாழ்ந்தவர் இராமாநுசர். அவர் திருவரங்கத்தில் இருக்கும் பொழுது ஆழ்வார் அருளிச் செயல்களைக் கூறி, அவற்றின் ஆழ் பொருள்களை எடுத்துக் கூறி அனுபவித்துவந்தார். ஒருநாள் திருவரங்கத்தில் நாச்சியார் திருமொழியைத் தன்னோடு உடனிருக்கும் சிஷ்யர்களோடு அனுபவித்துக் கொண்டிருக்கும்போது

''நூறு தடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து
பராவிவைத்தேன்
நூறுதடா நிறைந்த அக்கார அடிசில்
சொன்னேன்''

என்ற அடிகளைக் கூறினார். ஆண்டாள் வாய் நேர்ந்தாள்; சொன்னாள்; ஆனால் அவற்றைச் செயலாக்குவது நம் கடமையல்லவா' என்று தன் சிஷ்யர்களிடம் கூறியவர் படிப்பதை முடித்து விட்டுத் திருவரங்கத்திலிருந்து கிளம்பித்திருமாலிருஞ்சோலை வந்தார். ஆண்டாள் வாயால் நேர்ந்ததைச் செயல்படுத்தினார். நூறு அண்டாவில் வெண்ணெய் படைத்தார்; நூறு அண்டாவில் அக்கார அடிசில் படைத்துப் பெருமாளுக்குக் கைங்கரியம் செய்தார். திருமாலிருஞ்சோலை இறைவனுக்கு செயல்படுத்தி முடித்துவிட்டு அங்கிருந்து திருவில்லிப்புத்தூர் சென்றார்; ஆண்டாள் திருக்கோயிலுள் நுழைந்து ஆண்டாளை அடிபணிந்து நின்றார். அப்பொழுது ஆண்டாள், தான் முன்பு பாடலுள் கூறியதைச் செயல்படுத்திய இராமாநுசர் செயல்பாட்டுக்கு உகந்து ''நம் அண்ணரே'' என்று சொல்லித் தம் திருவுருக்காட்டி இராமாநுசரைத் தங்கை போல் தழுவிக் கொண்டாளாம். அன்றிலிருந்து ஆண்டாள், 'பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள்'' என்பர் பெரியோர். இதை உணர்ந்து தான் அப்பிள்ளை ஆண்டாள் வாழித்திருநாமத்தில் ''பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே'' என்று ஆண்டாளை வாழ்த்தியுள்ளார்.

ஆண்டாள் பெருமை அளவிடற்கரியது; அவள், 'அஞ்சு குடிக்கொரு சந்ததியாய்' அவதரித்தவள்; பிற ஆழ்வார்கள் தஞ்செயலை விஞ்சி நிற்கும் தன்மையள்! அவள் தமிழ்,

''பாதங்கள் தீர்க்கும்; பரமனடி காட்டும்
வேதமனைத்திற்கும் வித்தாகும்''

- அந்த ஆண்டாளைப் பத்தியுடன் நாளும் வாழ்த்தி வளம் பெறுவோம், உளம் மகிழ்வோம்.

★★★

# ஆணையாளரின் சுற்றறிக்கை

**சுற்றறிக்கை 62447/கே1 நாள்: 15.7.98.**

**பொருள் : திருக்கோயில்களில் கூட்டு வழிபாடு செய்ய அறிவுறுத்துவது - பற்றியது.**

★★★

மக்கள் அனைவரும் ஒன்றுகூடி வாழவும், கூட்டு வழிபாடுகளால் மேன்மை பெற்று வாழவும் ஆன்றோர்களால் தோற்றுவிக்கப்பட்டனவே நம் திருக் கோயில்கள் ஆகும்.

திருக்கோயில்களில் வாரம் ஒரு நாள் வசதி யான ஒரு நாளில் மெய்யன்பர்கள் கூடிக் கீழ்க் காணும் வழிமுறைகளைப் பின்பற்றிக் கூட்டு வழிபாடு செய்ய திருக்கோயில் நிர்வாகிகள் தக்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றது.

திருக்கோயில் திருச்சுற்றில் சிறப்பான ஒரு இடத்திலோ அல்லது மண்டபத்திலோ கூட்டு வழி பாட்டில் ஆர்வமுடைய மெய்யன்பர்கள் முதலில் திரளாக ஒன்று கடி அமர்ந்து கூட்டுவழிபாட்டைத் தொடங்க வேண்டும்.

அகவையாலும் அறிவாலும் மூத்த அனுபவ முள்ள ஆண் / பெண் இருபாலரில் ஒருவர் இக் கூட்டு வழிபாட்டுத் தலைமைப் பொறுப்பை ஏற்கத் திருக் கோயில் நிர்வாகிகள் ஆவன செய்யலாம்.

கூட்டு வழிபாடு முதலில் பிள்ளையார் வணக்கப்பாடலுடன் தொடங்கபபட வேண்டும்.

பிறகு ''ஓம் நமசிவாய'' எனும் மந்திரத்தை மனம் அடங்கும் வகையில் ஐந்து நிமிடங்கள் ஒருவர் எடுத்துக் கூற, மற்றவர்கள் பின் தொடர்ந்து கூற வேண்டும்.

பிறகு மாணிக்கவாசகர் அருளியுள்ள ''சிவ புராணத்தை'' ஒருவர் எடுத்துக் கூற மற்றவர்கள் பின் தொடர்ந்து கூற, முழுவதும் பாடி நிறைவு செய்ய வேண்டும்.

அதற்கு அடுத்தபடியாக திருஞான சம்பந்தர் அருளியுள்ள திருநீற்றுப் பதிகத்தையும் இதே முறை யில்பாடி நிறைவு செய்ய வேண்டும்.

அதற்கு அடுத்தபடியாக திருமுறைகளில் உள்ள திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் அருளி யுள்ள ''நமச்சிவாய''ப் பதிகங்களில் ஏதேனும் ஒரு பதிகத்தை ஒருவர் பாட மற்றவர்கள் பின் தொடர்ந்து பாடி அப்பதிகத்தை நிறைவு செய்ய வேண்டும்.

அதற்கு அடுத்தபடியாக மாணிக்கவாசகர் அருளியுள்ள போற்றித் திரு அகவலில்'' உள்ள ''தாயே ஆகி. வளர்த்தனை போற்றி'' என்பது முதலாகத் தொடங்கி ''போற்றி போற்றி சயசய போற்றி'' ஈறாக உள்ள தொடர்களை ஒருவர் எடுத்துக் கூறவும், மற்ற வர்கள் தொடர்ந்து கூறவுமாக முழுவதும் பாடி நிறைவு செய்ய வேண்டும்.

அதற்குப் பிறகுகூட்டு வழிபாட்டில் கலந்து கொண்டுள்ள மெய்யன்பர்களில் திருமுறைகள் பாடத் தெரிந்த ஆண் / பெண் இருபாலரில் வாரத்திற்கு ஓரீருவராக அவர்கள் தங்களுக்குத் தெரிந்த திருமுறைப் பாடல்களைப் பாடிச் சிறப்பிக்கலாம்.

இவ்வாறாகத் திருச்சுற்றில் கூட்டு வழிபாடு செய்து முடித்த பின் கூட்டு வழிபாட்டில் பங்கு கொண்ட மெய்யன்பர்கள் அனைவரும் ஒன்றாக இறைவன் சந்நிதிக்குச் சென்று திருநாவுக்கரசர் அருளியுள்ள போற்றித் திருத்தாண்டகத்தில் ஒரு தாண்டகத்தை பாடியும், முன் கூறிய முறையில் அந்தத் திருத்தலத்திற்குரிய தேவாரப்பதிகத்தைப் பாடியும், அத்தலத்திற்குரிய தேவாரப் பதிகம் இல்லையானால் 108 போற்றி கூறியும் கற்பூர ஆராதனையோடு வழிபாடு நிகழ்த்தலாம்.

பிறகு அம்மன் சந்நிதியிலும் அவ்வாறே கூட்டாக வழிபட்டு, அம்மனுக்குரிய பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் மற்றும் ''தனந்தரும் கல்விதரும்'' போன்ற அபிராமி அந்தாதிப் பாடல்கள் சிலவற்றைப் பாடிக் கற்பூர ஆராதனையோடு கூட்டு வழிபாடு நிகழ்த்துதல் வேண்டும்.

பிறகு அன்பர்கள் அனைவரும் ''போற்றித் திருத்தாண்டகம்'' பாடியவாறே சந்நிதியை வலம் வந்து கொடிமரத்தின் அருகே வந்து ''வான்முகில் வழாது பெய்க'' என்ற வாழ்த்துப் பாடலைப் பாடி,

**''தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி''**

என முழக்கம் செய்து கூட்டு வழிபாட்டினை நிறைவு செய்தல் வேண்டும்.

இக் கூட்டு வழிபாட்டில் பங்கு கொள்ளும் அனைவருக்கும் திருக்கோயில் நிர்வாகிகள் நன் கொடையாளர்கள் மூலம் சுண்டல் திருஅமுது வழங்க லாம். சுண்டல்திருஅமுது உண்டு இறையருளை நிறைவாகப் பெற்று மெய்யன்பர்கள் மணமகிழ் வோடும், மனநிறைவோடும் இல்லம் செல்லும் வகை யில் இக் கூட்டு வழிபாடு அனைத்துச் சிவாலயங் களிலும் முறையாக வாரம் ஒரு நாள் உயிரோட்ட முடன் நடைபெறச் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு திருக்கோயிலும் வசதியான ஒரு நாளைத் தேர்வு செய்து கொண்டு ஒவ்வொரு வாரமும் அதே நாளில் தொடர்ந்து கூட்டு வழிபாட்டினை நிகழ்த்துதல் வேண்டும்.

இக்கூட்டு வழிபாட்டிற்குரிய திருமுறைப் பாடல்களைத் தொகுத்து நூலாகத் திருக்கோயில் கள் இச்சுற்றறிக்கை மூலம் வெளியிட அனுமதி வழங்கப்படுகிறது.

இக் கூட்டு வழிபாட்டு நூலை அச்சிட்டு வழங்க உபயதாரர்களையும் திருக்கோயில் நிர்வாகி கள் பயன்படுத்திக் கொள்வது வரவேற்கத்தக்கது.

கூட்டு வழிபாட்டில் கலந்து கொள்ளும் முதியவர்களின் பயன்பாட்டிற்காக இக்கூட்டு வழி பாட்டு நூலை அச்சிடும் பொழுது அச்செழுத்துக்கள் தேவையான அளவு பெரிய எழுத்தாக அமைவது நல்லது.

கூட்டு வழிபாட்டில் பங்கு கொள்வோரிடம் நூலைத் தந்து வழிபாட்டின் முடிவில் நூலைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும், ஒவ்வொரு வாரமும் இதே போல் செய்ய வேண்டும்.

இத்தகைய கூட்டு வழிபாடுகளால் பக்தியும், பண்பாடும் தழைத்தினிதோங்கி வளருவதோடு, நம் சமயமும் தமிழும் ஏற்றம் பெறும் என்பது திண்ணம்.

ஆகவே அனைத்து இணை ஆணையர்களும் தத்தம் மண்டலங்களில் உள்ள திருக்கோயில்களில் கூட்டு வழிபாட்டிற்கு உடன் ஆவன செய்யுமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

இச்சுற்றறிக்கை கிடைக்கப் பெற்றதற்கான ஒப்புதலை உடன் அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

**ச. மெய்கண்டதேவன்,**

★★★




திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் ''குமரகுருபரர் விழா'' மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. திருக்கோயிலின் நிர்வாக அதிகாரி இணை ஆணையாளர் திரு. போ. ராமராஜு அவர்கள் தலைமை தாங்கிய இவ்விழாவில் முனைவர் மா. வண்ணமுத்து, ''திருக்கோயில்'' ஆசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம், பேராசிரியர் இராம சௌந்தரவல்லி, அருளரசு மாசிலாமணி ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

# கம்பனும் திருமுறைகளும்

— கம்பன் கவிநயமணி வே. தியாகராசன்

### 3. சுந்தரர் தேவாரம்

இறைவன் சுந்தரமூர்த்தி நாயனாரைத் தடுத் தாட் கொண்ட பின், அவரது கட்டளையின்படி ''பித்தா'' என அழைத்துப் பாடலானார். **'பித்தா'** என்ற சொல்லுக்கு பைத்தியக்காரன் எனப் பொருள் கொண்டால் அது நம் தவறே தவிர, நாயனாருடைய தல்ல. நாயனார் இறைவனை மறந்து திருமணம் செய்துகொள்ள முயன்ற போது தாயுள்ளம் கொண்ட இறைவன் தடுத்தாட் கொண்டார். **பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு** என ஒரு பழமொழி உண்டு. எனவே **பித்தா** என்ற சொல்லுக்குத் தாயுள்ளம் கொண்டவன் எனப் பொருள் கொள்ள வேண்டும்.

இறைவனைப் **பித்தன்** எனப் பெயர்கொண்ட தற்குப் பல பெரியோர்கள் பல காரணங்கள் கூறி யுள்ளனர். ''பெண்கள் மீது வைக்கும் ஆசையில் லட்சத்தில் ஒரு பங்கு உன்மீது வைத்தால் அவர் களுக்கு தேவருலகத்தில் பதவியளித்தருளுகிறாய். இவ்வளவு எளிமையாயிருப்பதால் உலகம் உன்னை ஏமாந்த பித்தன் என அழைக்கிறதோ?'' என்று ஒன்ப தாம் திருமுறையில் கருவூர்த்தேவர் பாடியருளினார்.

**தத்தையங் கனையார் தங்கள் மேல் வைத்த**
**தயாவை நூறாயிரம் கூறிட்டு**
**அத்தில் அங்குஒரு கூறு உன் கண்வைத்தவருக்கு**
**அமருலகளிக்கும் நின்பெருமை**
**பித்தனென்று ஒரு கால் பேசவரேனும்**
**பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்**
**கைத்தலம் அடியேன் சென்னி வைத்த கங்கை**
**கொண்ட சோளேச்சரத்தானே -**
**(9-ம் திருமுறை)**

மகாவித்வான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் ஒரு லட்சம் பாடல்களுக்கு மேல் பாடியவர். கம்பர் பத்தாயிரம் பாடல்களே பாடினார். பிள்ளையவர்களின் காலத்திலேயே அவரை **''பத்துக் கம்பர்''** என அழைத்துச் சிறப்பித்ததாக வரலாறு. தமிழ்நாட்டு அரசாங்கமும் தமிழ் நாட்டில் உள்ள தமிழ் அமைப்புகளும் இப்பெருமகனாருக்கு ஏதா வது நினைவுச்சின்னம் ஏற்படுத்தினால் அது தமி ழன்னைக்கே செய்யப்பட்ட சிறப்பாக அமையும். இறைவ னருள் இந்தப்பணியை நிறைவேற்ற வேண்டு கிறேன்.

திருவண்ணாமலையை ஒரு முறை கிரிப் பிரதிட்சிணம் வருவதற்குள் ''கற்பனைக்களஞ்சி யம்'' எனப் பெயர்பெற்ற சிவப்பிரகாச சுவாமிகள் சோணசைலமாலை என்று நூறு பாடல்கள் பாடினார் என்பது வரலாறு. அதே போல் மகாவித்வான் பிள்ளை யவர்கள் திருச்சியிலிருந்து ஓடத்தில் ஏறி (அக்காலத் தில் பாலம் கிடையாது) அக்கரை சென்று திரு வானைக்காவில் அகிலாண்ட நாயகியம்மையை தரிசித்து திருச்சி திரும்பும்போது அகிலாண்ட நாயகி மாலை என நூறு பாடல்கள் பாடினார். அந்நூலில் இறைவனைப் **பித்தன்** என அழைத்ததற்கு ஒரு காரணம் கூறியுள்ளார்.

''அன்னையே! அகிலாண்டநாயகியே! நாங்கள் எத்தனை குற்றங்கள் செய்தாலும் பொறுத்தருளும் உன்னைத் தன் உடலில் பாதியாக வைத்துக் கொண்டு அம்மையப்பன் என்ற பெயரோடு இறைவன் விளங்கு கின்றார். மூன்றே குற்றங்களைப் பொறுக்கும் கங்கை யைத் தன் தலையில் வைத்துக் கொண்டுள்ளார். (தண்ணீரில் நாம் வீழ்ந்து விட்டால் மூன்று முறைகள் மேலே கொண்டுவரும். பின்னர் உள்ளே இழுத்து நம்மை மூழ்கச் செய்யும். இதனையே மூன்று குற்றங் களைப் பொறுத்தல் எனக்கூறுவது வழக்கம்) அள வில்லாத குற்றங்கள் செய்தாலும் பொறுத்தருளும் உன்னையன்றோ தலையில் வைத்துக் கொண்டு சிறப்புச் செய்ய வேண்டும். அறியாது இப்படிச் செய்த தால் அவருக்குப் **பித்தன்** எனப்பெயர் வந்ததோ? என்று பாடினார்

**அளவறு பிழைகள் பொறுத்தருள் நின்னை**
**அணியுறுப் பாதியில் வைத்தான்**
**தளர் பிழை மூன்றே பொறுப்பவள் தன்னைச்**
**சடை முடிவைத்தனன். அதனால்**
**பிளவியல் மதியம் சூடிய பெருமான் பித்தன்**
**என்றொரு பெயர் பெற்றான்.**
**களமர் கொய் கழனி சூழ் திருவானைக்கா**
**அகிலாண்ட நாயகியே -**
**பிள்ளையவர்கள்**

ஞானசம்பந்தப் ( பெருமானின் தேவாரத்தில் ஏற்கனவே ''பித்தா, பி றைசூடி'' என்ற சொற்கள் வந்துள்ளன.

விண்ணோர் பெருமா னே! விகிர்தா!
விடையூர்தி!
பெண் ஆண் அலியாகு ம் பித்தா! பிறைசூடி!
எண்ணார் எருக்கத் தம் புலியூர் உறைகின்ற
அண்ணா! என வல்லார் க்கு அடையாவினை
தானே.

''உலகிலுள்ள எல்லாப் பெயரும் இறைவனின் பெயர்கள் தானே! பித்தன் என அ ழைக்கப்பட்டவருக்கு எல்லாப் பெயர்களும் ஒக்கும்.'' என்கிறார் ஸ்ரீராமலிங்க சுவாமிகள்.

சிற்சபையில் நடிக்கின்ற நா யகனார் தமக்கு
சேர்த்த புறச்சமயப் பெ யர்
பொரு ந்து வதோ? என்றால்
பிற சமயத்தார் பெயரும் அவர் பெயரே
கண்டாய்!
பித்தர் என்ற பெயர்பெ டைத்தார்க்கு எப்பெயர்
ஒவ்வாதோ?
அச்சமயத்தேவர் மட்டோ நின் பெயரும்
என் பெயரும்
அவர் பெயரே! எவ்வு யிரின் பெயரும்
அவர் பெயரே!
சிற்சபையில் என் கணவர் செய்யும் ஒரு ஞானத்
திருக்கூத்துக் கண்டளவே தெளியும் தோழி
(அருட்பா 5802)

★★★

மணிவாசக சுவாமிகளும் தி ருக்கழுக்குன்றம் பதிகத்திலே ''பிட்டிற்காகத் தலையி ல் மண் சுமந்த பித்தனே! இவ்வுடல் கிடைத்தும் உன்னை வழி படத்தவறினேன். அப்பேர்ப்பட்ட என்னையும் ஆட்கொண்டாயே!'' எனக் கூற வந்தவர், சிறிய ஊதியமான பிட்டிற்காகக் கூலியாளாக வந்து சிறு தொழில் செய்தனையோ (பெருந்துறைப் பெரும்பித்தனே!) என்றார்

பிட்டு நேர்பட மண்சுமந்த
பெருந்துறைப் பெரும்பித்தனே!
சட்ட நேர்பட வந்திலாத
சழக்கனேன் உனைச் சார்ந்திலேன்
சிட்டனே! சிவலோகனே! சிறு
நாயினுங் கடையாய வெங்
கட்டனேனையும் ஆட்கொள்வான் வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே-
திருக்கழுக்குன்றப்பதிகம் - 2
- திருவாசகம்

என் தந்தையே! யாவுமாகி நின்றவனே! எப்பொருளையும் கருணையுடன் சித்தத்தில் வைத்து அருளும் சித்தனே! பக்தர்களால் இறுகப் பற்றிக் கொள்ளப்பட்ட பெருமானே! தனக்கு எப்பயனும் இல்லாவிடினும் படைத்தல், காத்தல் ஆகியவற்றைச் செய்யும் பித்தனே! (இதையும் தாயுள்ளம் கொண்ட செய்கை எனக் கூறலாம்). உன்னை இறுகப்பற்றிக் கொண்டேன். எங்கு எழுந்தருளிச் செல்ல முடியும்? என்றார்.

அத்தனே! அண்டரண்டமாய் நின்ற
ஆதியே! யாதும் ஈறில்லாச்
சித்தனே! பக்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே! சிவபெருமானே!
பித்தனே! எல்லாவுயிர்க்குமாய்த் தழைத்துப்
பிழைத்து: அவையல்லையாய் நிற்கும்
எத்தனே! உன்னைச் சிக்கெனப்பிடித்தேன்.
எங்கெழுந்தருளுவது இனியே!
(திருவாசகம் - பிடித்தபத்து 8)

இவை தவிர யாவரும் வணங்கும் பித்தன் புத்தன் புரந்தராதியர் அயன்மால் போற்றி செயும் பித்தன் - தென்பாலுகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன் - பெண்பாலுகந்தான் பெரும்பித்தன் என்றெல்லாம் பேசுவார் மணிவாசகப்பெருமான்.

★★★

இனி கம்பன் கூறுவதைக் கேட்போம். இராமலிங்கசுவாமிகள் , மணிவாசகப் பெருமான், ஞானசம்பந்தர் முதலான நன்னெறியுள்ள சிவபக்தர்கள் இறைவனைப் பித்தன் என அழைத்தனர். சாமவேதம் பயின்று, சிவபெருமானது அருளைப் பெற்று பல சிறப்புக்களுடன் நல் வாழ்வு வாழ்ந்த இராவணன், பிறன்மனைவியைக் கவர்ந்து நெறிதவறிய நிலையில், தனக்கருள் செய்த தெய்வமான சிவபெருமானை ''பித்தான ஈசனும் மற்ற தெய்வங்களும் தத்தம் வாகனங்களில் ஏறி தனக்குப் புறமுதுகு காட்டி ஓடியதாகக் கூறுகிறான். பெண்ணாசை தெய்வத்தைக் கூட நிந்திக்கும் நன்றியற்ற தன்மையை உண்டாக்கும்போலும்!

பித்தனாகிய ஈசனும்: அரியும்: என்
பெயர் கேட்டு
எய்த்த சிந்தையர்: ஏகுழி ஏகுழியெல்லாம்

*தைத்த ஏற்றினும், கடவிய புள்ளினும் முதுகில்*
*தைத்த வாளிகள் இன்றுள குன்றின்*
*வீழ்ந்தழுந்தின*

**கம்ப - யுத்தகாண்டம் - மந்திரப்படலம் - 116.**

★ ★ ★

கம்பன் சிவபெருமானை சாதாரணமாக **''பித்தன்''** எனக் கூறவில்லை. **அறிவுமுற்றிய பித்தன்** என ஏற்றமாக பேசினார். கும்பகர்ணன் தன்மீது ஏவிய சூலமொன்றை அனுமான் சூலாயுதத்தால் ஒடித்தார். சீதாபிராட்டியைத் திருமணம் செய்துகொள்ளுவதற்காக இராமபிரான் **அறிவுமுற்றிய பித்தனான** சிவபெருமானது வில்லையொடித்தபோது உண்டான ஓசைபோல் அனுமான் கும்பகர்ணன் விட்ட சூலாயுதத்தை ஒடித்தபோது ஓசை உண்டாயிற்று.

*சித்திரவனமுலைச்சீதை செவ்வியால்*
*முத்தனார் மிதிலையூர் அறிவுமுற்றிய*
*பித்தன் வெஞ்சிலையினை இறுத்த பேரொலி*
*ஒத்தது சூலம் அன்று இற்ற ஓசையே*
**(கம்ப - கும்பகர்ணன் வதைப்படலம் 262)**

**பிறை சூடி** என்ற அடைமொழிக்கு ஞானசம்புந்தப் பெருமானது **தூவெண்மதி சூடி** என்ற வாக்குக்குப் பொருள்காட்டும் பாடல் முன் கட்டுரையிலேயே உள்ளது. தாயுள்ளம் கொண்டு கருணை செய்வது பெரியோர் செயல். அதனால் **பெருமானே** எனக்கூறி, அருளைக்காட்டியதன்மையை **அருளாளா** எனக் கூறி ''எம் பெருமானே'' திருவெண்ணை நல்லூர் அருட்துறைத் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள உம்மை மறவாது என்றும் நினைக்கிறேன். நினைப்பேன். முன்னமே உமக்கு அடிமையான என்னை இப்போது உன் அடிமையல்ல எனக் கூறலாமா?'' என்றார்

**திருச்சிற்றம்பலம்.**

*பித்தா! பிறை சூடி! பெருமானே! அருளாளா!*
*எத்தான் மறவாதே நினைக்கின்றேன்*
*மனத்துன்னை!*
*வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணை*
*நல்லூரருட்டுறையுள்*
*அத்தா! உனக்காளாய் இனி அல்லேன்*
*எனலாமே.*

**திருச்சிற்றம்பலம்.**

ஏற்கனவே உனக்கு அடிமையான நான் என்னைத் தடுத்தாட் கொள்ள வந்தபோது ''அந்தணர் பிறருக்கு அடிமையாவது வழக்கமில்லை.'' எனப் பேசலாமா! குற்றமன்றோ! என்னை மன்னித்தருள்க என வேண்டினார் என்பதும் பொருள்.

★ ★ ★

## வாசகர் எண்ணங்கள்

திருவேற்காடு தேவி கருமாரியன்னையின் அட்டைப்படமும், கட்டுரைகளும் மிகமிகச் சிறப்பு.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் திருமண மக்களை வாழ்த்தி ஆற்றிய உரையைப் பலமுறையும் படித்து மகிழ்ந்தேன். ''தாய்வீட்டுச் சீதனம்'' என வாழ்த்திய அவர்தம் வாழ்த்திற்கு ஈடு இணை இல்லை.

**- இரா கவிப்பித்தன்,** மதுரவாயில்

முனைவர் இரா. செல்வகணபதி அவர்களின் சைவமும், பெரியபுராணமும் சீரிய ஆய்வுக்கட்டுரையாக அமைந்து விளங்குகின்றது.

**- டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்,**
தி. நகர், சென்னை - 17.

அறநிலையத் துறையின் ஈராண்டுச் சாதனைப் பட்டியல் கண்டேன். மகிழ்ச்சி கொண்டேன். அறநிலையத்துறைக்கு இது பொற்காலம். மறுமலர்ச்சி நற்காலம். காலத்தால் மறைக்க முடியாத கணக்கற்ற அறப்பணிகளால் இன்றுபோல் என்றும் அறநிலையத் துறை சிறக்க வாழ்த்துகின்றேன் - வேண்டுகின்றேன்.

**- சி. சரவணகுமார்,** வடபழனி.

கம்பன், திருநாவுக்கரசர் சரிதத்தைப் பிரகலாத சரித்திரத்துடன் இணைத்துப் பாடியுள்ள சிறப்பைக் கம்பன் கவிநயமணி அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

**- எம். ஜெகதீசன்,** நந்தனம்.

குமரகுருபரர் திருவுள்ளத்தைத் தெளிவு படுத்திக் காட்டியது ஆசிரியர் எழுதியிருந்த கட்டுரை வறுமையை விழைந்து வேண்டிய அவரைப்போன்ற அருளாளர் யாவரே உளர்? இறையருள் இன்பம் அளித்துத் திழைக்கச் செய்தது அவரைப்பற்றிய கட்டுரை

**- முனைவர் இரா. சுப்பிரமணியன் ,** சேலம்.

# சைவமும் பெரியபுராணமும்

— பேராசிரியர் முனைவர் இரா. செல்வகணபதி,
எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி.,

(சென்ற இதழின் தொடர்ச்சி)

## நாட்டு நகரப் படலங்கள்

பெரிய புராணத்தின் காப்பியத் தலைவர் சுந்தரர் என்று கூறப்பெற்றாலும், சேக்கிழாருக்கு அவர் மேலான ஈடுபாடு திருத்தொண்டத் தொகை பற்றியதே ஆகும். காப்பிய நாயகராகிய சுந்தரர் பிறந்த நாடாகிய திருமுனைப்பாடி நாட்டையும், ஊராகிய திருநாவலூரையும் விடுத்து, திருத்தொண்டத்தொகை பிறந்த நாடாகிய சோழ நாட்டையே நாடாகவும் அது தோன்றக் காரணமாயிருந்த திருவாரூரையே நகரமாகவும் கொண்டு நாட்டு நகரப்படலங்கள் அமைத்த சேக்கிழாரின் திருவுளம் இதனை நிறுவ உதவுகின்றது. திருத்தொண்டத்தொகை தொகையாக, திருத்தொண்டர் திருவந்தாதி வகையாக, பெரியபுராணம் விரிநூலாகச் செய்யப்பெற்றது எனக் கூறப்பெறுகிறது. எனினும் இவை இரண்டும் பெரிய புராணத்திற்கு வழங்கும் ஒளி மிகச் சிறியடீத.

## ஓர் ஐயப்பாடு

சேக்கிழாரின் அளவிலாப் புலமையையும், சமூக நல்லெண்ணத்தையும், பக்திக்கனிவையும் நோக்கும்போது, மனித இலக்கியத்திற்கு மூலங்களைத் தாமே தொகுத்து இருக்கக்கக் கூடுமே ! ஏன் திருத்தொண்டத் தொகை வழிநின்று பாட வேண்டுமென்ற நியாயமான ஐயம் எழுதல் இயல்பே! அவர் விரும்பி இருந்தால் விரிவாக வரலாறு கூற இயலாத, சில அடியவர்களை விடுத்து, வேறு சிலரை இணைத்து ஒரு பெருங்காப்பியம் பாடியிருக்கமுடியும். சுந்தரர் வழிநின்று பாடுதல் சேக்கிழாரைப் பொருத்த வரை ஒரு பாதுகாவல். சோழர் குலத்தின் தலைமை அமைச்சராக வாழ்ந்ததிலிருந்து பெரியபுராணம் பாடிய சேக்கிழார், அவர் காலத்துச்சோழர் தலைநகராகிய கங்கைகொண்டசோழபுரத்தைப் பற்றியோ, இராசஇராசனின் தஞ்சைப் பெரிய கோயிலைப் பற்றியோ ஒரு வரி கூடப் பாட விரும்பியிருக்க வில்லை. சுந்தரர் வழிநின்று பாடாது தம் விருப்பம் போல் பாடியிருந்தால், செம்பியன் மாதேவி யையும், கண்டராதித்தனையும் பாடவேண்டிய நிர்ப்பந்தம் வரக்கூடும். சுந்தரர் குறிக்காத அடியவர் எவர் ஒருவரையும் பாடாத சேக்கிழார் மனுநீதிச் சோழனை மட்டும் குறித்தனர். இதுபற்றி ஆய்ந்த க. வெள்ளை வாரணர் கூறுவன இங்கே சிந்திக்கத் தக்கன.

'இறைவனது திருவருளின் வழி நிகழும் அரசியல் நெறிமுறைக்கு வரம்பாக மனுநீதிச் சோழனது சரிதம் திருத்தொண்டர் வரலாறு கூறும் இப்புராணத்தின் தொடக்கத்தே திருநகரச்சிறப்பில் விரித்துரைக்கப் பெறுவதாயிற்று. திருத்தொண்டர் புராணம் ஆகிய இக்காப்பியத்தில் உலகியல் ஆட்சிக்கெல்லாம் உறுதுணையாய் நின்று, என்றும் மாறா இயல்பினதாகிய திருவருளின் வழிபட்ட அருளியல் ஆட்சியை முற்கூறி அதன் வழி நிகழும் அடியார் செய்கைகள் விரித்துரைக்கப் பெறுவன.[34] எனவே சேக்கிழாரின் திருவுள்ளம் திருவருளின் வழிப்பட்ட அருளியல் ஆட்சி அமைதலையே குறிக்கோளாகக் கொண்டிருந் தமை நன்கு விளங்குகின்றது.

எனவே, இதுவரை இக்கட்டுரையின் முதற் பகுதியாகிய, பெரியபுராணம் சிவன் அடியர்களைப் பாடும் பெருங் காப்பியமாக உருப்பெற்றது ஏன் என்ற வினாவிற்கான விடைகள் நிரலே ஆய்ந்து நிறுவப் பெற்றன.

## சைவ சமய வரலாற்றில் பெரியபுராணம்.

'சைவமும் பெரியபுராணமும்' என்ற இக் கட்டுரையின் இரண்டாவது பகுப்பு ' அடியவர்களைப் போற்றிய பெரியபுராணத்தின் தோற்றத்தால் சைவ சமயமும், சமயஞ் சார்ந்த சமுதாயமும் பெற்ற நன்மைகள்' என்பது. இவ்விரண்டாவது தலைப்புக் கீழ்க் கண்டவாறு பகுத்து ஆராய்ந்து நிறுவப்பட்டுள்ளது.

1. சைவ சமயத்தில் அடியவர்களுக்கு முதன்மையும் பெருமையும் அமைந்தது.

34. வெள்ளைவாரணனார். க. 'பன்னிருதிருமுறை வரலாறு! 2ம்பாகம். பக்கம் 872, 73.

2. சமயஞ் சார்ந்த வாழ்வின் எல்லைகள் வரை யறுக்கப் பெற்றது.

3. தேவார மூவா, மற்றும் சைவ அடியார் வரலாறு களுக்கு ஒளியூட்டிச் சமய வாழ்வில் விழிப்புணர் வினைத் தோற்றியது.

4. சமயத்தின் ஒளியில், சாதி பேத இருள் நில்லாது, என விளக்கி, பல்வேறு குலத்து அடியவர் திருமேனிகளைச் சிவாலயத்தில் எழுந்தருளி விக்கச் செய்தது.

5. வழிபாட்டுச் சமயமாக - சடங்குச் சமயமாக நின்று விடாது சைவத்தை அர்த்தமுள்ள வாழ்க்கைச் சமயமாக்கி வழங்கியது.

6. குருலிங்க சங்கம் நெறி புதுக்கி, ஆண்டவனோடு ஒப்ப, பெருவாழ்வு வாழ்ந்த அடியவர்களை வழிபடுவதன் மூலமும், பண்பாட்டையும், மனித நேயத்தையும் வற்புறுத்திச் சைவத்தை வாழ் வித்தது.

7. சமய வாழ்வில் ஒழுக்கத்தையும், பண்பாட்டை யும், மனித நேயத்தையும் வற்புறுத்திச் சைவத்தை வாழ்வித்தது.

8. பெரியபுராண ஆசிரியர், நூலாசிரியராய், உரை யாசிரியாய், தத்துவ ஆசிரியராய், போதகாசிரிய ராய் நின்று சமய நுட்பங்களுக்கு ஒளியூட்டியது.

9. ஏறத்தாழ 500 ஆண்டுகாலச் சைவ சமய வளர்ச்சிக்கு வரலாற்றுப் பின்னணியோடு வடிவங்கொடுத்தது.

சேக்கிழாரின் பெரிபுராணம் சைவ சமயத் திற்கு வழங்கிய அருட்கொடைகள் பல. ஆயினும் கட்டுரையின் எல்லை கருதித் தலையாய இவ் வொன்பது கூறுகள் மட்டும் உர்ய ஆதாரங்களுடன் கீழே நிரலே நிறுவப்பட்டுள்ளன.

**1. சைவ சமயத்தில் அடியவர்களுக்கு முதன்மையும், பெருமையும் அமைந்தது.**

இறைமைக் கொள்கையோடு முரண்படாது மானுடத்தை முன்னிறுத்திப் பின்னப்பட்ட அருள் நூல் பெரியபுராணம் என்பது முன்னே காட்டப் பட்டது. இறைவனையும் - மனிதனையும் இணைத்துப் பின்னப்பெற்ற சைவ சமய புராண இலக்கியங்கள் இரண்டு. ஒன்று பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற்புராணம். இரண்டாவது சேக்கி ழாரின் பெரியபுராணம். இரண்டு புராணங்களிலும் ஆண்டவனும், அடியவர்களும் இடம் பெற்றுள் ளனர். ஆயினும் இரண்டிற்குமிடையே பெரிய வேறுபாடு உண்டு. திருவிளையாடற்புராணம், உயிர் களின் எய்ப்பும் இயலாமையும் கருதிப் பேரரு ளாளராகிய சிவப்பரம்பொருள் விண்பழித்து மண்புகுந்து தாமே உயிர்களை வலிய ஆட்கொண்ட கருணையின் பெருமையை விரிப்பது. ஆயின் பெரியபுராணமோ மண்ணின் மைந்தர்களாகிய தமிழகத்து அடியவர்கள், தங்கள் செயற்கருஞ் செயல்களால் இறைவனை மண்ணுலகை நோக்கி ஈர்த்த அருமைப்பாடு மிக்கது. முன்னது இறைவன் கருணையை வியப்பது. பின்னது அடியவர் உறைப்பை வியப்பது.

பெரியபுராணச் சீர் அடியார்களின் அருள் வரலாறுகளைக் கூர்ந்து நோக்குவார்க்கு ஓர் உண்மை நன்கு புலனாகும். நிலவுலகில் இறை நெறி வழாது வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வச் சீரடியார் இயற்றிய தொண்டில் மகிழ்ந்த இறைவன் அவர் அன்பை நுகர்ந்து அருளவும், அவரை விளக்கம் காணவும், அவர்தம் பெருமையை உலகறியச் செய்ய வுமே மண்ணுக்கு வருகிறான். அடியவர் எவரையும் இறைவன் சோதித்து அறிய முயன்றதாகச் செய்திகள் இல்லை. பக்திநெறி, உயர்பேர் ஒழுக்கம், சமூக நல்லுணர்வு, உயர்ந்த பண்பாடு மிக்க அடியவர்களை உலகவர் அறிதல் வேண்டுமென்பதும், அவர்களை உரியவாறு உலகுக்கு அறிவிக்க வேண்டுமென்பதுமே சிவபெருமானின் திருவுள்ளமாக இருந்ததென்பதைப் பெரியபுராணம் நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

இறைவனும், மனிதனும் கைகோர்த்து உலவும் பெரியபுராணத்தில், சில குறிப்பிட்ட நாயன்மார் வரலாற்றில் இறைவனின் பங்கேதும் இல்லை என்றே கூறிவிடல் கூடும். பலகாலும் தோல்வி கண்ட பகைவன் முத்தநாதன் சைவச் சிவனடியார் வடிவில்வந்து தம்மை வாளால் வெட்டி வீழ்த்துகின்றான். அவனைத் தாக்க வந்த மெய்க் காப்பாளன் தத்தனைத் தடுத்து 'தத்தா நமர்' என்று கூறிப் பகைவனுக்கு உயிர்ப் பிச்சை அளிக்கும் பண்பாட்டைச் சேக்கிழார் மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றில் வைத்துப் பேசிக் காட்டுகின்றார். சிவபிரான் 'மெய்த்தவ வேடமே' மெய்ப்பொருள் எனத் தொழுதும் வென்ற'[35] அடியவர்க்குக் காட்சி நல்கித் தம் திருவடிகளில் இணைத்துக் கொண்டார் என்பதே சேக்கிழார் காட்டும் வரலாற்றுச் செய்தி. மெய்ப்பொருள் வரலாற்றில் நேரே இறைவன் பங்கு ஏதுமில்லை. பகைவனுக்கு அருளும் பண்பாடு காத்த ஒருவனுக்கு இறைவன் அருள் உண்டு என்பதே

35. பெரியபுராணம் பாடல் 481.

இவ்வரலாறு காட்டும் உண்மை. இதனோடு இணைத்துச் சேக்கிழார் கூறும் பிறிதோர் உண்மையும் உண்டு. அது நுட்பமாகத் தேடி அறியக்கிடப்பது. தம் உயிர்க்கு இறுதி விளைவித்தவன் உயிர்க்குத் தாமும் இறுதி விளைக்கக் கருதாது, அவனை மன்னித்து வாழ அனுமதித் தமைக்குக் காரணம் அவன் பூண்டிருந்த சிவ வேடமே. பகைவன் மன்னிக்கப் பெற்றமைக்கு அடிப்படை, அவனும் சைவ சமயத்துள் ஒருவன் என்ற மெய்ப் பொருளாளரின் எண்ணமே காரணம். எனவே, சமய வாழ்வு உயிர்க்கிறுதி விளைப்பாரையும் மன் னிக்கும் அளவுக்குப் பண்பாட்டு நெறிக்கு வழி கோலுதல் எண்ணி மகிழத்தக்கது. பகைவன் நெற்றி யில் முன் காணாத திருநீறு கண்டவிடத்து, அவன் விருப்பத்திற்கு இசைந்து தம் ஆவி துறக்க இசைந்த ஏனாதிநாதர் வரலாறும் இதனோடு இணைந்ததே ஆகும். வறுமை யிலும் விருந்தோம்பலில் தலைநின்ற இளையான் குடிமாறருடைய அருள் வரலாறும் இங்கே நினைவு கூறத்தக்கதே. இவ்வரலாறுகளில் எல்லாம் மனிதப் பண்பாட்டின் வெற்றிக்கு இறைவன் ஆசி வழங்க எழுந்தருளி வருவதாகவே காட்டப்பட் டுள்ளது. பெரியபுராணம் இவ்வகையில் அடியவர் களுக்கு முதன்மையும், பெருமையையும் வழங்குதல் நினைந்து போற்றத்தக்கது.

**2. சமயஞ் சார்ந்த வாழ்வின் எல்லைகள் வரையறுக்கப் பெற்றது.**

சேக்கிழாரின் பெரியபுராணம் வெளிப்படு தற்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரே தமிழில் சைவஞ் சார்ந்த தமிழ்நூல் ஒன்று நிலவியிருந்தது. சித்தர் நெறி வந்த அருளாளர்களுள் ஒருவராகிய திருமூலரால் அருளிச் செய்யப்பெற்ற திருமந்திரமே அது. தமிழில் சைவஞ் சார்ந்த தமிழ்நூல் ஒன்று நிலவியிருந்தது. சித்தர் நெறிவந்த அருளாளர்களுள் ஒருவராகிய திருமூலரால் அருளிச் செய்யப்பெற்ற திருமந்திரமே அது. தமிழகத்துச் சித்தர் நெறி சிவ நெறியே என்பது அறிஞர் துணிபு[37] திருமந்திரம் சைவஞ் சார்ந்த தோத்திரம்: சாத்திரம்: யோகம்: மந்திரம்: உலகியல் முதலிய பல்வேறு கூறுகளை உள்ளடக்கியது. 'அன்பே சிவம்' என்பது தமிழ் நாட்டில் வழங்கிவரும் ஒரு பழந்தொடர். திருமூலர் அன்பையும், சிவத்தையும் ஒன்றாகவே கருதினார் இவற்றை வேறு வேறாகப் பகுப்பாரை அறிவிலர் எனச் சாடினர்.[38] இவ்வன்பு நெறியின் முதிர்ச்சி உலகத்து உயிர்கள் பால்நேயமாக மலர்ந்தது. சிவப் பரம் பொருளும் அன்பும் ஒன்றே எனின், அன்புடையார் எல்லோரும் சிவப்பரம்பொருளே எனத் திருமூலர் தெளிந்தனர். அவ்வன்புடையாரை நடமாடும் கோயில் நம்பர் எனப் போற்றினர்.[39] அன்பின் மிக்க அடியவரை எல்லாம் சிவமாகவே கருதும் கருத்து திருமந்திரத் தில் நன்கு அரும்பியது.

'நடமாடுங்கோயில் நம்பர்' என மனிதனையே சிவமாகப் போற்றிய திருமூலர் சமய வாழ்விற்குச் சில கடமைகளை வரையறுத்தனர். 'யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை' என்ற பாடல் திரு மூலரின் சமயஞ் சார்ந்த மனிதர் கடமைகளை உணர்த்திற்று. ஓர் பச்சிலையைப் பறித்துச் சிவலிங்கத் திருமேனி மீது இட்டு அர்ச்சிப்பதோடு சமயஞ் சார்ந்த வழிபாட்டுச் சடங்கு முற்றுகின்றது. சிவ பெருமானை இறைவனாக ஏற்றுக்கொண்ட சைவ னுக்குச் சமயஞ் சார்ந்த வேறு மூன்று சமுதாயக் கடமைகளை இப்பாடல் திருமூலர் உணர்த்துகிறார். 'பசுவுக்கு ஒரு வாயுறை' என்பதன் மூலம் இரக்கமும், 'உண்ணும்போது ஒரு கைப்பிடி' என்பதன் மூலம் மனித குல நேயமும், ''பிறர்க்கு இன்னுரை தாமே' என்பதன் மூலம் மனிதப் பண்பாடும் சைவ சமயஞ் சார்ந்தாரின் கடமைகள் என்பது திருமூலர் திருவுள்ள மாதல் தெளிவாகிறது.

சேக்கிழாரின் பெரியபுராணம் திருமூலரின் வழிநின்று நடமாடும் கோயில் நம்பர்களாகிய அன்பே வடிவாய அடியவர்களை உலகிற்கு ஒளியூட்டிக் காட்டுகின்றது. 'அன்பு' என்பது ஆண்டவன்பால் வைப்பது மட்டுமன்று; உலகத்து உயிர்கள் மேலெல் லாம் செலுத்தப்படவேண்டுவது என்ற தெளிவும், 'தொண்டு' என்பது இறைவனுக்குச் செய்வது மட்டு மன்று தன்னை ஒத்த மனிதனுக்குச் செய்வதே அரிய தொண்டு என்ற உறுதியும் சேக்கிழாரின் பெரிய புராணத்தில் எங்கும் முரண்படாது ஒலிப்பது கூர்ந்து நோக்கி மகிழத்தக்கது.

தாண்டவம் புரிய வல்ல தம்பிரானுக்கு அப்பூதி அடிகளார்[41] இயற்றியன மக்கள் நலம் குறித்த நல்லறங்கள். பசித்தார்க்கு உணவளிக்க அன்னசத்திரம், தவித்தார்க்கு நீர் வார்க்க தண்ணீர் பந்தல், வாட்டந் தவிர்க்க இளமரக்காக்கள், சிற்றுயிர்களுக்காகக் குளங்கள்! இதில் கூட ஓர் அழகு உண்டு. சைவ

37. மாணிக்கவாசகம். இரா.டாக்டர். 'திருமந்திர ஆராய்ச்சி' பக்கம் 145.

38. திருமந்திரம் பாடல் 270.

39. ஷை பாடல் 1857.

40. ஷை பாடல் 252.

41. பெரியபுராணம். பாடல்; 1788.



அடியார் அப்பூதி, சைவஞ் சார்ந்தவர்களுக்காக மட்டும் இவற்றை அமைக்காது அனைத்து ஜனங் களுக்காகவும் அமைந்த பெருமிதத்தைச் சேக்கிழார் மறவாது சுட்டுகின்றார். சமயவாழ்வில் வழிபாடு ஒரு சிறு கூறு. சைவ சமயஞ்சார்ந்த அன்பர்கள், இறைவனுக்கு ஒப்ப மனிதர்களை அடியவர்களாகப் போற்றவேண்டும். அவர் தம் தேவைகளை இயன்றவாறு நிறைவிக்க வேண்டும். உயிர் இரக்கம் பேண வேண்டும். பண்பாடு காக்க வேண்டும் என ஒப்பற்ற சமயஞ்சார்ந்த வாழ்வின் எல்லைகளைப் பெரியபுராணம் வற்புறுத்தி வரை யறுத்துக் காட்டுகின்றது. சைவத்தின் கூறுபாடுகளாகச் சேக்கிழார் வழிபாடு, உயிர் இரக்கம், மனிதநேயம், பண்பாடு என்ற நான்கு அரிய கூறுகளையே நூல் முழுதும் பரக்கப் பேசுகின்றார்.

**3. தேவாரமூவர் மற்றும் சைவ அடியார் வரலாறுகளுக்கு ஒளியூட்டிச் சமய வாழ்வில் விழிப் புணர்வினைத் தோற்றியது.**

திருத்தொண்டர் தொகை வழிநின்று, திருத் தொண்டர் திருவந்தாதி காட்டிய சிற்றொளியோடு, தம் உள்ளொளியால், உழைப்பால் அறுபான் மும்மை நாயன்மார் வரலாறுகளை வரலாற்றுத் தெளிவோடு சேக்கிழார் பெரியபுராணமாக வடித்து அருளினார். 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட பாடிய கவி வளவ' எனச் சேக்கிழாரைப் பாராட்டுவார் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை[42] பெரிய புராணம் தோன்றியிராவிடில் சைவத்திருமுறை கள் உரிய சிறப்பினை எய்தி இருத்தல் இயலாது. மூவர் தேவாரங்கள் தமிழகத்தில் பெற்ற பெருஞ் சிறப்புக்குப் பெரியபுராணமே வழியிட்டது என்பது மறுக்க இயலாத உண்மை. பெரியபுராணப் பின்னணி அறியாது மூவர் தேவாரங்களை ஒருமுறை ஓதி, பின்னர் பெரியபுராணம் பயின்று அவற்றை ஓது வார்க்கே, பெரியபுராணம் ஏனைச் சைவத் திருமுறை களுக்கும், சைவ அடியார்களுக்கும் எந்த அளவு ஒளியூட்டியிருக்கிறது என்பது நன்கு புலனாகும்.

(தொடரும்)

42. சேக்கிழார் பிள்ளைத் தமிழ் பாடல்.

# பைந்தமிழ் மாறன் பசுந்தமிழ் ஆனந்தம்

— திருமதி அனுசுயா, எம்.ஏ.எம்.பில்.

''அருள்கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினான்
அருள்கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே''

என்று மதுரகவிகள் கொண்டாடிய நம்மாழ்வாரை நாமும் கொண்டாடிப் போற்றுவதுதான் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வடநாட்டில் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் அயோத்தியில் திருத்தல யாத்திரையில் இருந்த மதுரகவி ஆழ்வாரை ஈர்த்துக் கட்டி நம் புண்ணிய தமிழ்த்திருநாட்டிற்கு அழைத்துவந்த ஞானஜோதி நம்மாழ்வார் முகவட்டத்தில் முகிழ்த்து எழுந்த ஞானஜோதியே ஆகும்.

தென்திசையில் தினமும் இரவில் சுடர்விட்டு ஒளிர்ந்த அந்த ஞானஜோதியைத் தொடர்ந்து வந்து - பல திங்கள் அச்சோதியைத் தொடர்ந்து வந்து, ''உண்டோ திருக்குருகூருக்கு ஒப்பு?'' என்று ஆன்றோர்கள் பரவும் நம்மாழ்வார் திருஅவதாரம் புரிந்த திருக்குருகூர் வந்து சேர்ந்தார் மதுரகவிகள்.

குறுநில மன்னரான காரிமாறருக்கும் அவர் துணைவியார் உடைய நங்கையாருக்கும் திருக்குறுங்குடி எம்பெருமானின் திருவருளால் பிறந்த தெய்வக் குழந்தை தாம் நம் நம்மாழ்வார்.

அத்தெய்வக்குழந்தை பிறந்தபிறகும் தன் கண்களைத் திறந்து பார்க்கவில்லை. வாய்திறந்து அழவில்லை. உணவொன்றும் உட்கொள்ளவில்லை.

உலகத்தன்மைக்கு மாறுபட்டுத் திகழ்ந்த அக்குழந்தைக்கு ''மாறன்'' எனவே பெயரும் சூட்டித் திருகுருகூர் பொலிந்து நின்ற பிரான் திருச்சந்நிதியில் விட்டுவிட்டுச் சென்றுவிட்டனர் ஈன்றெடுத்த தாயும் தந்தையும்.

சடத்தைக் கோபித்திருந்த அச்சடகோபராம் திருக்குழந்தை திருக்குருகூர் புளியமரத்தின் பொந்திலே போய்ச் சேர்ந்துகொண்டு, பதினாறு ஆண்டுகள் ஞான நிட்டையிலே திகழ்ந்தது.

இப்பொந்துக் குழந்தையின் மெய்ஞ்ஞானப் பொலிவுதான் தொண்டுக் கிழவரான மதுரகவிகளை மயக்கி ஈர்ந்து இழுத்து வந்து விட்டது.

அதுகாறும் ஒருவரையும் ஏறிட்டுப் பார்க்காத அத்தெய்வக்குழந்தையின் பார்வை தம்மீது பட வேண்டும் என்று ஏங்கிய மதுரகவிகள் முதலில் அக்குழந்தையின் முன் ஒரு கல்லை எடுத்துப் போட்டார். திருக்கண்களால் தம்மை ஏறிட்டுப் பார்த்த அப் புண்ணிய பதினாறாண்டு தெய்வக் குழந்தையிடம் பின் ஒரு கேள்விக் கணையையும் எடுத்து வீசினார்.

''செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால்
எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?''

இதுகாறும் எவரிடமும் வாய்திறந்து பேசாத மாறர் மாறு உரைத்தார்; வீறு பெற உரைத்தார்.

''அத்தை தின்று அங்கே கிடக்கும்''

சடகோபர்வாய்மலர்ந்தருளிய முதல் திருவாய்மொழி இதுதான். இவ் வாய்மொழி சிறியது ஆயினும் இதில் அடங்கியிருந்த தத்துவவிளக்கம் மிகப் பெரியது.

உடம்பினோடு கூடிய உயிர் எதனை உணவாகக் கொண்டு எங்கே வாழும் என்று மதுரகவிகள் தொடுத்த கேள்விக்கணைக்கு, அந்த உடலினால் ஏற்படும் சுகதுக்கங்களை உணவாகக் கொண்டு அந்த உடலையே இடமாகக் கொண்டு அங்கே அந்த உயிர் வாழும் என்று விடையிறுத்தார் ஞாலத்தை ஆள வந்த நம்மாழ்வார்.

உலகின் சுகதுக்கங்களையே உணவாகக் கொண்டு உலகோடு வாழவேண்டிய வழக்கத்திற்கு மாறாக உண்ணாமலும் உரை ஒன்றும் பேசாமலும் திகழ்வது ஏன் என்றும் தம் கேள்வியால் அக் குழந்தையை மடக்கிவிட்டதாகவும் எண்ணி இறுமாப்புக் கொண்டுவிட்டாராம் மதுரகவிகள்.

''அத்தை தின்று அங்கே கிடக்கும்''

என்ற தம்பதிலில் மதுரகவிகளின் இறுமாப்பு தீரும் வகையில் தம் ஞானநிலையைத் தெளிவுறுத்தியும் விடுகிறார் நம்மாழ்வார்.

''எம்நிலைவேறு. 'அ' என்பது அரியின் கல்யாண குணங்களைச் சுட்டுவதாகக் கொண்டு அரியின்

கல்யாண குணங்களையே உணவாகக் கொண்டு ''அத்தைத் தின்று அங்கே கிடப்பது எம்நிலை'' - இவ்வாறு நம்மாழ்வார் தெளிவுறுத்தி மதுரகவிகளின் மயர்வற திருவுள்ளம் பாலிக்க, அத்தெய்வக் குழந்தையின் திருவடிகளைப் பணிந்து

''தேவு மற்று அறியேன்''

என்று மதுரகவிகள் கொண்டாடிய இந்த வரலாறு ஞாலம் கொண்டாடத்தக்க புண்ணிய வரலாறு தானே!

ஆழ்வார்கள் அனைவரிலும் ஏற்றம் பெறும் ஆழ்வார் நம்மாழ்வார்தாம். எம்பெருமானே ''நம்மாழ்வார்'' என்று கொண்டாடியதால் ''நம்மாழ்வார்'' என்ற திருநாமம் இவருக்கு ஏற்பட்டுள்ளது.

மற்ற ஆழ்வார்கள் இறைவன் இருக்கும் திருக்கோயில்களுக்குச் சென்று பாடிப் பரவி அருள் பெற்றார்கள். ஆனால் நம்மாழ்வார் இருக்கும் இடத்திற்கே தேடிவந்து அவருக்குத் தரிசனம் தந்து அவருடைய மங்களாசாசனம் பெற்றனர் திவ்வியதேசப் பெருமான்கள் என்பது நம்மாழ்வாருக்கு உள்ள ஏற்றத்தை நமக்கு நன்கு காட்டுகின்றது.

நம்மாழ்வார் அங்கம் என்றால் அந்த அங்கத்தின் அங்கம்தான் நமது மற்ற ஆழ்வார்கள்.

நான்கு வேதங்களின் சாரத்தை நமக்குத் தெய்வத்தமிழ் மறையாக நம்மாழ்வார் அருளிச் செய்துள்ளார்கள்.

நம்மாழ்வார் அருளியுள்ள திருவிருத்தம் - ரிக்வேத சாரம்; திருவாசிரியம் - யஜுர்வேத சாரம் பெரிய திருவந்தாதி - அதர்வண வேத சாரம். திருவாய்மொழி - சாமவேத சாரம்.

திருவாய்மொழியில் 1102 திருப்பாசுரங்கள் நமக்குக் கிடைத்துள்ளன.

திருவிருத்தத்தில் 100 பாசுரங்கள்;<br>
திருவாசிரியத்தில் 7 பாசுரங்கள்<br>
பெரிய திருவந்தாதியில் 87 பாசுரங்கள்

ஆக 1296 திருப்பாசுரங்கள் நம்மாழ்வார் நமக்கு அருளிச் செய்துள்ள அருந்தமிழ்க் கருவூலமாகும்.

அவர் வள்ளல் - தென் குருகைவள்ளல்<br>
அவர் நமக்கு வழங்கிய தமிழ் -<br>
வாட்டமிலா வண்தமிழ், ஒண்தமிழ்.

அவர் வண்தமிழ் மறையால் வையம் வாழ்ந்து, வைணவம் வாழ்ந்தது; நாராயணன் நாட்டிய வேதம் களிப்புற்றது என்று அடுக்கிக் காட்டுகின்றது இராமாநுச நூற்றந்தாதி நூல்.

''நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன;<br>
நாரணனைக்<br>
காட்டிய வேதம் களிப்புற்றது,<br>
தென்குருகைவள்ளல்<br>
வாட்டம் இலா வண்தமிழ் மறைவாழ்ந்தது<br>
மண் உலகில்<br>
ஈட்டிய சீலந்து இராமாநுசன்தன்<br>
இயல்பு கண்டே.''

இராமாநுசர் தமக்கு மகாநிதி திருவாய் - மொழியே என்று போற்றியுள்ளார். தமக்குத் தாயும், தந்தையும், குருவும், எம்பெருமானும் எல்லாமும் திருவாய்மொழியே என்று இராமாநுசர் திருவாய்மொழியைப் போற்றிய சிறப்பினையும்

''உறுபெருஞ் செல்வமும் தந்தையும் தாயும்<br>
உயர் குருவும்<br>
நெறிதரு பூமகள் நாதனும் மாறன் விளக்கிய சீர்<br>
நெறிதரும் செந்தமிழ் ஆரணமே என்று<br>
இந்நீள் நிலத்தோர்<br>
அறிதர நின்ற இராமாநுசன் எனக்கு<br>
ஆர் அமுதே''

என்று போற்றுகின்றது இராமாநுச நூற்றந்தாதி.

இவ்வாறு இராமாநுசரும், வைணவசமயமும் இவ்வையமும் போற்றிக் கொண்டாடும் நம் செந்தமிழ் ஆரணமான திருவாய் மொழிக்கு இணையான ஒரு நூல் இல்லை என்பதை எடுத்துக்காட்டும் ஒரு அரிய நிகழ்ச்சியும் நம்மாழ்வாரும், மதுரகவியாழ்வாரும் வாழ்ந்திருந்த அந்தக் காலத்திலேயே நடைபெற்றிருப்பது இங்கு நினைந்து மகிழத்தக்க ஒன்றாகும்.

மதுரகவி ஆழ்வார் சங்கத்தமிழ் தழைக்கும் மதுரைமாநகருக்குச் சென்றிருந்த போது அங்கிருந்த தமிழ்ப் புலவர் பெருமக்கள் பலரும் தத்தம் நூலே உயர்ந்தது என்று வாதிட்டுக் கொண்டிருந்துள்ளார்கள்.

பொற்றாமரைக் குளத்தில் இருந்த சங்கப் பலகை சிறந்த நூலை மட்டுமே ஏற்றுச் சிறப்பிக்கும்.

மதுரகவி ஆழ்வார் திருவாய்மொழி நூலிலிருந்து ஞானத்தமிழ் தழைக்கும் இரண்டே அடிகளைக் கொண்ட நம்மாழ்வாரின் அருட்பாடலை எழுதிச் சங்கப்பலகையின் மேல் வைத்தார்.

''கண்ணன் கழலினை
நண்ணும் மனம் உடையீர்
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே''

சங்கப் பலகை மற்றமற்ற புலவர்களின் நூல்களைக் கவிழ்த்து விட்டு

''மிக்க இறைநிலையும் மெய்யாம்
உயிர்நிலையும்
தக்க நெறியும் தடையாகித் - தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் ..........
யாழின் இசை வேதத்தியல்''

எனச் சிறப்பிக்கப்படும் திருவாய்மொழி அமுதக்'' கடலிலிருந்து கண்ணன் கழலிணை'' எனும் அமுதத்தை ஏற்றருளிச் சிறப்பித்து என்பது ஒரு அற்புத வரலாறாகும்.

திருவாய்மொழியிலுள்ள ஒவ்வொரு திருப்பாசுரமும் திருப்பாற்கடல் அமுதம், ஆரா அமுதம்.

''ஆரா அமுதே'' என்று நம்மாழ்வார் அருளிச் செய்த பாசுரம்தானே நமக்கு நாலாயிரத் திவ்விய பிரபந்தம் முழுவதும் நாதமுனிகள் தொகுத்து வழங்கக் காரணமானது என்ற ஒரு வரலாறும் இங்கு எண்ணி எண்ணி மகிழத்தக்க ஒரு அற்புத வரலாறு ஆகும்.

இப்படி ஒவ்வொரு பாசுரமும் ஆரா அமுதமாகத் தித்திப்பது நம்மாழ்வார் திருவாய் மொழிப் பாசுரமாகும். ''பைந்தமிழ் மாறன் பசுந்தமிழ் ஆனந்தம்'' என்றல்லவா திருவரங்கத்து அமுதனாகும் திருவாய்மொழி அமுதத்தின் சிறப்பை விவரித்துப் போற்றியிருக்கக் காணுகின்றோம்.

அத்தகைய திருவாய் மொழி அமுதப்பாற் கடலில் தொட்ட இடமெல்லாம் சுவை, சுவை, தீஞ்சுவை தானே!

''உயர்வற உயர்நலம் உடையவன் எவன் அவன்
மயர்வற மதிநலம் அருளினன் எவன் அவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவன் அவன்
துயரறு சுடரடி தொழுது எழு என்மனனே''

என்பது திருவாய்மொழியின் முதல் அமுதப்பாடல். இறைவனுடைய அருமையை - பெருமையை இதற்கு மேல் யாரால் அறுதியிட்டு உறுதியாகக் கூற முடியும்?

வேற்றுமையில் ஒற்றுமை கண்டு, சமய ஒருமைப்பாட்டுடன் மக்கள் யாவரும் வாழவேண்டும் என்று அன்றே நமக்குத் திருவாய்மொழி அமுதப் பாசுரத்தில் அறிவுறுத்தியுள்ளார் நம்மாழ்வார். அப் பாசுரம் பின்வருமாறு:

''அவரவர் தமதமது அறிவு அறி வகைவகை
அவரவர் இறையவர் என அடி அடைவர்கள்;
அவரவர் இறையவர் குறைவிலர்; இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே''

திருவேங்கடப் பெருமானுக்குத் தொண்டு செய்து கிடப்பதுவே வையத்துள் பிறந்தார் பெறும் பெரும் பயன் என்பதையும்

''ஒழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி
வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்
தெழிகுரல் அருவித் திருவேங்கடத்து
எழில்கொள் சோதி எந்தை தந்தை தந்தைக்கே''

என்ற திருப்பாசுரத்தில் தெளிவுபடுத்தியுள்ளார் நம்மாழ்வார்.


மானிடருக்குத் தொண்டுசெய்து மாளாவினை மூண்டு, மேன்மேலும் பிறவியே சூழ்ந்து பிறவிப் பெருங்கடலில் வீழ்வாருக்கும் ஆழ்வாருக்கும் நம்மாழ்வார் ''சொன்னால் விரோதம் ஆயினும் சொல்லுவன்'' என்று சொல்லும் - கரையேற வழிகாட்டும் அருட்பாசுரம் இவை:

''சொன்னால் விரோதம் இது ஆகிலும்
சொல்லுவன் கேண்மினோ
என்நாவில் இன்கவியான் ஒருவர்க்கும்
கொடுக்கிலேன்
தென்னா தெனா என்று வண்டுமுரல்
திருவேங்கடந்து
என் ஆனை, என் அப்பன், எம்பெருமான்
உளனாகவே''

''வம்மின் புலவீர், நும்மெய் வருத்திக்
கைசெய்து உய்ம்மினோ
இம்மன் உலகினில் செல்வர் இப்போது
இல்லை நோக்கினோம்
நும் இன் கவிகொண்டுநும்நும் இட்டா
தெய்வம் ஏத்தினால்
செம்மின் சுடர்முடி என் திருமாலுக்குச்
சேருமே''

அடியார் திருக்கூட்டத்தோடு என்றும் இணைந்து 'அகலகில்லேன் இறையும் என்று அலர் மேல் மங்கை உடன் உறையும் மார்பனுக்கே தொண்டு செய்வாருக்கு அற்றது பற்று; உற்றது வீடு என்பது திருவாய்மொழி நமக்கு உணர்த்தும் மெய்ஞ்ஞானச் சாரமாகும்.

பெரியாழ்வார் திருப்பல்லாண்டு பாடி வாழ்த்துவது போல அடியார் திருக்கூட்டத்தாருக்கு நம்மாழ்வார் கூறும் வாழ்த்துப் பாசுரம் இது.



''பொலிக பொலிக பொலிக
போயிற்று வல்உயிர்ச் சாபம்
நலியும் நரகமும் நைந்த,
நமனுக்கு இங்கு யாதொன்றும் இல்லை
கலியும் கெடும் கண்டுகொண்டான்,
கடல்வண்ணன் பூதங்கள் மண். மேலே
மலியப் புகுந்து இசைபாடி
ஆடி உழிதரக் கண்டோம்''
''கண்டோம் கண்டோம் கண்டோம்
கண்ணுக்கு இனியன கண்டோம்
தொண்டீர் எல்லீரும் வாரீர்
தொழுது தொழுது நின்று ஆர்த்தும்
வண்டார் தண்அம் துழாயான்
மாதவன் பூதங்கள் மண்மேல்
பண்தான் பாடிநின்று ஆடி
பரந்து திரிகின்றனவே.''

நம்மாழ்வார் திருவாய் மலர்ந்துள்ளவாறு அவர்தம் ஈரத்தமிழின் இசை உணர்ந்து போற்றிட வல்லாருக்கு வல்லுயிர்ச்சாபம் போய், மங்கள வளங்கள் யாவும் பொலியும் என்பது திண்ணம். பண்தரும் மாறன் பசுந்தமிழாகிய ஆனந்தத்தை நாளும் பருகிப் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு தொண்டீர் எல்லோரும் வாழ தூமணி வண்ணனை வாழ்த்தி வணங்கிப் போற்றுகின்றேன்.

வாழி நலம்.

★★★

# சிவனடியார்களுக்குச் சாதிபேதம் உண்டா?

— செந்தமிழ் வேள்விச் சதுரர் மு.பெ. சத்தியவேல் முருகன்

**(சிவனடியார்களைச் சாதிபேதம் கூறித் தாழ்வுபடுத்தலாமா? என்று ''திருக்கோயில்'' அன்பர் ஒருவர் வினவிய வினாவிற்கு விரிவாக விடையினை வழங்கியுள்ளார் செந்தமிழ் வேள்விச்சதுரர் திரு. மு.பெ. சத்தியவேல் முருகன் அவர்கள். இதனை அன்பர்கள் படித்து சாதிவேற்றுமை களைந்து சமத்துவம் கண்டு வாழ வேண்டுகின்றோம்.)**

சிவதீட்சை பெற்றபின் சாதி பார்ப்பது கூடாது. சிவதீட்சை பெற்றவுடன் ஒருவர்க்குப் பசுகரணங்கள் பதிகரணங்களாக மாறி சிவமேயாவர் என்பது ஆகமக் கருத்து. அப்படி எல்லோர்க்கும் மாற்றம் நிகழவில்லை என்றாலும் பாவனையினால் அப்படிக் கருதத் தக்க தகுதி அவர்கட்குத் தான் உண்டு. கால வட்டத்தில் அந்தப் பாவனை முற்றிப் பாவகப் பயன் எய்துவதற்கு அவர்கட்கு வாய்ப்பு உண்டு. சிவமேயானவர் என்று கருதுபவரிடையே சாதி வேற்றுமை செல்லாது.

**சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்**
**தோத்தி ரமும்குலமும் கொண்டென்செய்வீர்**
**பாத்தி ரம்சிவ மென்று பணிதிரேல்**
**மாத்தி ரைக்குள் அருளுமாற் பேறரே.**

என்பது அப்பர்வாக்கு.

தமிழ்ஞானசம்பந்தர் திருநீலநக்கர் என்னும் அந்தணர் வாழும் ஊர்க்குச் செல்கிறார். உடன்நிழல் போலத் தொடரும் திருநீலகண்ட யாழ்ப்பாணரும், அவரது மனைவியார் மதங்க சூளாமணியாரும் சம்பந்தருடன் இருக்கின்றனர். இவர்கள் தற்போதைய சமூக வழக்கில் தாழ்ந்தவராகக் கருதப்படும் பாணர் மரபில் வந்தவர்; அட்டவணை இனத்தவர். இந்த வேற்றுமை பாராது சம்பநதர் தாம் செல்லும் இடங்கள் தோறும் அழைத்துச் செல்கிறார். இங்கும் அழைத்து வந்த ஞானசம்பந்தர் திருநீலநக்கர் என்னும் அந்தணரைப் பார்த்து இத் தம்பதியர் தங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கூறுகிறார்.

உடனே திருநீலநக்கர் திருநீலகண்ட யாழ்ப் பாணரையும், அவரது துணைவியாரையும் தம் வீட்டில் தினந்தோறும் தாம் இயற்றும் வேள்விக் குண்டத்திற்கு அருகாக அழைத்துச் சென்று படுக்க வைத்தாராம். இத்தம்பதியர் அங்கு படுத்தவுடன் வேள்விக்குண்டத் தில் யாருடைய முயற்சியுமின்றி தாமாக வலம் சுழித்து எழுந்ததாம் வேள்வித்தீ. வலம் சுழிப்பது மிக நல்ல அறிகுறி. எனவே தீ வலம் சுழித்து எழுவதைக் கண்டு திருநீலநக்கர் மனம் மிக மகிழ்ந்தாராம்.

**ஆங்கு வேதியில் அறாதசெந் தீவலஞ் சுழிவுற்று**
**ஓங்கி முன்னையில் ஒருபடித் தன்றியே ஒளிரத்**
**தாங்கு நூலவர் மகிழ்வுறச் சகோடயாழ்த்**
**தலைவர்**
**பாங்கு பாணியா ருடன்அரு ளால்பள்ளி**
**கொண்டார்.**

இப்பாடலில் குறிப்பிடப்படும் சகோடயாழ்த் தலைவர் - திருநீலகண்ட யாழ்ப்பாணர்: பாங்கு பாணி யார் என்பது அவரது மனைவியரான மதங்க சூளா மணியார்: நூலவர் - திரு நீலநக்கர்.

எனவே அட்டவணை இனத்தவர் வந்து அருகே பள்ளி கொள்ள தீ வலஞ்சுழித்தெழுந்திட நூலவரான அந்தணர் மகிழ்ந்தார் என்னும் போது போலிச் சாதிப் பெருமை துகளாகப் பொடிபடுவது காண்க.

நமிநந்தியடிகள் என்று ஒருவர்; இவரும் அறுபான்மும்மை நாயன்மாரில் ஒருவர். திருவாரூர் அருகே உள்ள திருமணலி என்ற ஊரில தியாகேசப் பெருமாள் எழுந்தருளும் உற்சவத்திற்குச் சென்று தரிசனம் செய்துவிட்டு வீட்டிற்கு வந்து உற்சவத்தில் பலபேருடன் கலந்ததினால் தீட்டுப் பட்டுவிட்டது குளிக்க வேண்டும் வெந்நீர் தயார் செய் என்று மனைவி யிடம் சொல்லித் திண்ணையில் சாய்ந்தார். சாய்ந்த வர்க்கு இறைவன் திருவருளால் உறக்கம் வந்து விட்டதாம். உறக்கத்தில் கனவு வந்ததாம். கனவில் இறைவன் வந்து உற்சவத்திற்கு வந்தவர்களைச் சாதி வேற்றுமை பார்க்கிறாயே! அங்கு வந்தவர்கள் எல்லோ ரும் சிவகணங்கள் என்று உணர்த்தினாராம். நமிநந்தி யடிகள் இதனை உணர்ந்து திருந்தினார் என்பது வரலாறு. இறைவனே சாதி வேற்றுமையை ஒழி என் பதைக் காண்க.

இது மட்டுமல்லாமல் ஆதி சைவரான சுந்தரர் தம்பிரான் தோழர். தோழமை காரணத்தால் சுந்தரர் விரும்பியபடி இரண்டு திருமணங்களைச் செய்து

வைக்கிறார் இறைவர். ஒருத்தி பதியிலார் குலம்; மற்றொருத்தி வேளாளர் குலம். இவ்விரு மகளிர்க்கும் ஆதிசைவரான சுந்தரர்க்கும் இறைவனே திருமணம் செய்து வைத்ததைக் காண்க.

சுந்தரரைத் தெய்வமாக வழிபட்ட நாயனாருள் ஒருவர் கோமாசிமாறர்; அந்தணர். இவர் வேள்வி செய்தே இறைவனை அடைந்தவர். ஆனால் எந்த சாதி வேற்றுமையும் பார்க்க மாட்டாராம்.

**''எத்தன்மைய ராயினும் ஈசனுக்கு அன்பர் என்றால்**
**அத்தன்மையர் தாம்நமை யாள்பவர் என்று கொள்வார்''**

என்று சேக்கிழார் கூறுகிறார்.

இவர் செய்த பெருவேள்வி ஒன்றிற்கு இறைவன் இறைவியோடு புலையனும் புலைச்சியுமாக எழுந்தருளினராம். சோமாசிமாறரும் உடன் இருந்த சுந்தரரும் இறைவனை அடையாளம் கண்டு புலையனையும் புலைச்சியையும் வேள்வி குண்டத்தின் அருகில் வைத்து ஆராதனை செய்தார்கள் என்று அம்பர் புராணம் கூறுகிறது. சாதி வேற்றுமை பாராதே என்பதை உணர்த்த வேள்வியில் இறைவன் புலையனாக எழுந்தருளியதை உணராமல் வேள்வியில் பங்கு கொள்ப வரின் சாதியைப் பார்ப்பது என்ன நியாயம்?

**''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்''**
**''அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டொழுக லான்''**

என்ற வள்ளுவர் வாக்குகளை மறந்து பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிப்பது ஆண்டவனுக்கு சம்மதமன்று. இன்னும் பலப்பலச் சான்று காட்டலாம்.

திருவீழிமிழலையில் செந்தமிழால் அர்ச்சனை செய்து கொண்டிருந்தார்கள் என்று பாடுகிறார் சம்பந்தர். அதில் யார் அவர்கள் என்று கூறும்போது அந்தமில் குணத்தவர்கள் என்றார். அந்தணர் என்று கூறவில்லை.

மணிவாசகர் அந்தணர் என்பது ஆவது என்கிறார். பிறப்பால் வேதியர் இனத்தைச் சேர்ந்த மணிவாசகர் இறைவன்தான் தன்னை அந்தணன் ஆக்கினான் என்கிறார். ''அந்தணன் ஆவதும் காட்டி வந்தாண்டாய்'' என்பது திருப்பள்ளியெழுச்சியில் அவர் அருளிய வாக்கு. அந்தணன் என்பது பிறப்பினால் வருவதல்ல; அந்தணன் என்பது குணத்தினால் ஆவது என்று இதை விட அழகாக யார் கூறமுடியும்? அதுவும் கூறுகின்ற மணிவாசகரே பிறப்பால் வேதியர் என்பதால் அந்த வாக்கு வலுவடைகிறது.

அப்பூதியடிகள் என்ற அந்தணர் அப்பர் என்னும் வேளாளரைக் குருவாக ஏற்றார். அங்கே சாதி தடையாக நிற்கவில்லை. சுந்தரர் என்னும் ஆதிசைவர் திருஞானசம்பந்தர் என்னும் சுமார்த்தரையும் அப்பர் என்னும் வேளாளரையும் குருவாக ஏற்றார். அங்கே சாதி தடையாக நிற்கவில்லை. இன்னும் சொல்லப் போனால் சுந்தரர் பல்வேறு சாதியினரைச் சேர்ந்த எல்லா அடியார்க்கும் தான் அடியேன் என்று பாடினார்; அங்கே சாதி வேற்றுமை தவிடுபொடியாகிறது. ஆதி சைவரான நம்பியாண்டார் நம்பியும் சுந்தரரை அடியொற்றி திருத்தொண்டர் திருவந்தாதி பாடி பல்வேறு சாதியினரைச் சேர்ந்த அடியார்க்குத் தாம் அடியேன் என்று பாடினார்; அங்கே சாதி தூள்தூளாயிற்று.

சகலாகம பண்டிதரும் ஆதிசைவரும் ஆன அருள்நந்திசிவம் வேளாளரான மெய்கண்டாரிடம் தீட்சை பெறுகிறார்; அங்கே சாதி போன இடம் தெரியவில்லை. மறைஞான சம்பந்தர் என்னும் வேளாளரிடம் உமாபதிசிவம் என்னும் தில்லை மூவாயிர அந்தணரைச் சேர்ந்த தீட்சிதர் தீட்சை பெறுகிறார்; அங்கே சாதி காணாமல் கூக்குரலிட்டு ஓடி வருகிறது.

உமாபதிசிவம் மறைஞான சம்பந்தரிடம் தீட்சை பெற்ற வரலாறே சாதி ஆதிக்கசாம்ராஜ்யத்தை வேரும் வேரடி மண்ணுமாக சாய்த்த வரலாறாகக் கிடைக்கிறது. மறைஞான சம்பந்தர்பால் ஈர்க்கப்பட்ட உமாபதி சிவ தீட்சிதர் அவரிடம் தீட்சை பெற அவர் பின்னாலேயே உடன் தொடர்கிறார். சிதம்பரத்தின் ஒரு வீட்டின் முன் கையேந்தி நிற்கிறார் மறைஞான சிவம். பக்கத்தில் உமாபதிசிவம் நிற்கிறார். மறைஞான சிவம் நின்ற வீடு ஒரு செங்குந்தரின் வீடு. பாவுநூல் பதனிட வைத்திருந்த கஞ்சியை மறைஞான சிவத்தின் கையில் அந்தச் செங்குந்தர் ஊற்ற அதனை அவர் பருகிய போது கைவழி ஒழுகிய கஞ்சியை உமாபதிசிவம் பருகினாராம். உடனே இவருக்கு பக்குவம் நிறைந்தது என்று மறைஞான சம்பந்தர் உமாபதி சிவத்திற்குத் தீட்சை செய்தார்.

செங்குந்தர் வீட்டு எச்சில் கஞ்சியை உண்டார் என்று தில்லை மூவாயிரவர் சாதி வேற்றுமை கருதி உமாபதி சிவத்தைத் தள்ளி வைத்தனர். சின்னாள் கழித்து திருவாதிரை விழா வந்தது. கொடியேற்றி உற்சவம் ஆற்றுவது உமாபதிசிவத்தின் நியமமாக வந்தது. உமாபதிசிவம் ஏற்கனவே தள்ளி வைக்கப்பட்டதனால் அவரின்றிக் கொடியேற்றம் செய்ய முயன்றனர்.

கொடி ஏறவில்லை. உமாபதிசிவம் வந்தால் கொடி ஏறும் என்று அசரீரி ஒலித்தது. தவற்றை உணர்ந்து மன்னிப்பு கேட்டு உமாபதிசிவத்தை அழைத்து வந்தனர். உமாபதிசிவம் கொடியை வாங்கி உடனே கொடியேற்றம் செய்யவில்லையாம். கொடியைச் செங்குந்தர்களிடம் கொடுத்து தில்லை மாடவீதிகளில் வீதிவலம் வரச்செய்து பின்னர் கொடியேற்றத்தைக் கொடிக்கவிபாடி நிறைவேற்றினார் என்பது வரலாறு. இன்னும் தில்லையில் கொடியேற்றத்திற்கு முன் கொடியைச் செங்குந்தர்களிடம் கொடுத்து வாங்கியே கொடியேற்றம் செய்வது மரபாய் உள்ளது.

எனவே இங்கே சாதி வேற்றுமை தூள்தூளாகப் பொடிபடுவதைக் காண்க.

இத்தனை சொல்லியும் சாதிகளால் விடாப் பிடிக் கொள்கையராக இருப்பாராயின் அவர்கள் அறிவதற்காகவே ஒரு திருமுறைச் சான்று உண்டு.

இச்சான்று பதினோராம் திருமுறையில் நக்கீர தேவர் அருளிய போற்றிக் கலிவெண்பாவில் கிடைக்கிறது.

அருச்சுனன் பாசுபதம் வேண்டி அருந்தவம் மேற்கொண்டான். அவனுக்கு அருள் புரிய இறைவன் வேடுவனாக வில்லேந்தியும் உடன் வேடச்சியாக இறைவியும் வந்தனர். அருச்சுனனின் தவத்தைக் கலைக்க ஒரு பன்றி முயலுகிறது. அப்பன்றி காட்டுப் பன்றி. அதனை அருச்சுனன் தன் காண்டீபத்தால் அம்பெய்து கொல்ல முயல்கிறான். அம்பு வில்லி லிருந்து பாய்கிறது. அந்த அம்பு காட்டுப்பன்றியைத் துளைக்கும் அதே நேரத்தில் இன்னொரு அம்பும் அக்காட்டுப் பன்றியைத் துளைக்கிறது. தான் குறி வைத்ததை வேறு எவன் குறி வைப்பது என்று கோபித்து வேடுவனாக வந்த இறைவனுடன் சண்டை யிடுகிறான். இறைவன் அவனுடன் விற்போர் மற் போர் ஆகியவற்றை விளையாடலுக்காக ஆற்றி அருச்சுனனை அலுக்க வைக்கிறார். அலுப்பு அதிக மாக மிகக் கோபமாக அருச்சுனன் இறைவனைக் குலம் குறித்து ஏய்! வேடுவப் பயலே! என்று திட்டு கிறான். பின்னர் இறைவனை உணர்ந்து அடிபணிந்து அருளும் வேண்டி வரமும் பெறுகிறான் என்பது வரலாறு. ஆனால் இறைவனிடம் பாசுபதம் பெற்றா லும் குலம் குறித்துத் திட்டியமையால் அருச்சுனனுக்கு பரமபதம் கிடைக்காமல் வேறு ஒரு பிறவி கிடைத்த தாம். அந்தப் பிறவி அவன் எந்தக் குலம் குறித்துத் திட்டினானோ அந்த வேடுவப் பிறவி. அவன்தான் கண்ணப்பன்.

இந்த வரலாற்றை நக்கீர தேவர் போற்றிக்கலி வெண்பாவில் பாடிப்பரவுகிறார்.

**பேசு பதப்பாற் பிழை பொறுத்து மற்றவற்குப்**
**பாசு பதம் ஈந்த பதம் போற்றி - நேசத்தால்**
**வாயில்நீர் கொண்டு மகுடத் துமிழ்ந்திறைச்சி**
**ஆயசீர் போனகமா அங்கமைத்துத் - தூயசீர்க்**
**கண்ணிடந்த கண்ணப்பர் தம்மைமிகக்**
**காதலித்து**
**விண்ணுலகம் ஈந்த விறல் போற்றி**

இந்தப் பாடல் வரிகளில் அருச்சுனன்தான் கண்ணப்பன் என்று வரவில்லையே என்று கேட்கலாம். இதனை பக்கிசைத்தில் (அதாவது ஒன்றன் பக்கத்தில் இயைபு கருதி மற்றொன்றை உடனாக வைத்தல்) என்ற உத்தியினால் உய்த்துணர வைத்தார். அருச்சுனன்தான் கண்ணப்பர் என்ற கருத்தினை இலர் உடையவர் என்பது இவர் பாடிய கைலை பாதி காளத்தி பாதி அந்தாதியால் தெளிவாகத் தெரியவருகிறது.

**வாமான்தேர் வல்ல வயப்போர் விசயனைப்**
**போல்**
**தாமார் உலகில் தவமுடையார் - தாம்பார்க்கும்**
**காண்டற் கரியராய்க் காளத்தி ஆள்வாரைத்**
**தீண்டத் தாம் பெற்றமையால் சென்று**

என்று மேற்படி அந்தாதியில் நக்கீர தேவர் பாடு கிறார். விசயனே அடுத்த பிறவியில் கண்ணப்பனாக வந்து காளத்தியில் குடுமிநாதரைத் தீண்டிப் பெறற்கரிய பேறு பெற்றார் என்பது மேற்கூறிய பாடலின் கருத்து. விசயன் காளத்தி நாதனைத் தீண்டியதாகவோ தீண்டி அதனால் பேறுபெற்றதாகவோ எந்த மகாபாரதத்திலும் எந்த வரலாறும் கிடையாது. எனவே விசயனே கண்ணப்பனாக வந்து பேறு பெற்றான் என்பது கருத்து.

இந்த வரலாற்றில் இருந்து தெரியும் மாபெரும் உண்மை என்ன என்றால், நாம் எந்த ஒரு குலத்தை யும் இழிவாகப் பேசக் கூடாது; பேசினால் இழிவாகப் பேசிய அந்தக் குலத்திலேயே பிறக்க வேண்டிய ஒரு பிறவியைக் கூட்டிக் கொள்கிறோம் என்பதுதான்.

எனவே குலம்குறித்து தகுதி பேசல் கூடாது. சிவதீட்சை ஒன்றே தகுதி. தவத்திற்கும், ஆண்டவன் தரிசனத்திற்கும். தகவில்லாக் குலப் பேச்சிற்கும் ஏதும் சம்பந்தமில்லை என்பது அங்கையில் நெல்லியங்கனி போல தெளிவாயிற்று. ஆகவே சிவனடியார்கள் எல்லோரும் ஒரு குலத்தர் என்பதே உண்மை. எல் லோரும் இறைவன் மக்கள் ஆதலால் மதங்கருதியும் குலம் கருதியும் மனக்கசப்பை வளர்க்கும் குற்றம் விடுத்து "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற திருமூலர் நெறி போற்றி, வையத்தில் எல்லோரும் நலமுற வாழ்வோமாக!

# வழிபாட்டுச் சிறப்பும், வரலாற்று பெருமையும் மிகுந்த அன்பில் திருக்கோயில்கள்

— கி.ஸ்ரீதரன், எம்.ஏ.,
பதிவு அலுவலர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை, திருச்சி.

திருத்தவத்துறை என்னும் லால்குடியிலிருந்து சுமார் 6 கி.மீ தொலைவில் கொள்ளிடம் ஆற்றின் கரையில் தோப்புகள் வயல்கள் சூழ்ந்து இயற்கை அழகுடன் காட்சி தருகிறது அன்பில் கிராமம்.

ஆற்றங்கரையில் இருக்கும் பெரும்பாலான கோயில்களின் பெயர்கள் 'துறை' என்றுமுடியும். காவிரி ஆற்றின் வடகரையில் திருவிசயமங்கை, திருமழபாடி, திருமாந்துறை, திருப்பாற்றுறை, திருஆனைக்கா, திருப்பைஞ்ஞீலி போன்ற பாடல் பெற்ற தலங்கள் உள்ளன. இவற்றில் அன்பில் தலமும் ஒன்று.

இவ்வூரில் வரலாற்றுச்சிறப்பும், வழிபாட்டுச் சிறப்பும் வாய்ந்த பெருமாள், சிவன், அம்பாள் ஆலயங்கள் உள்ளன.

'அன்பில்' என்றால் அன்பு குடிகொண் டிருக்கும் ஊர் என்பது பொருள். 'பிரேமபுரி' எனவும் அழைக்கின்றனர். சிவன்கோயில் இருக்கும்பகுதி 'கீழ் அன்பில்' என்றும், பெருமாள் கோயில் இருக்கும் பகுதி மேல் அன்பில் எனவும் அழைக்கப்படுகிறது. இங்கே கோயில் கொண்டிருக்கும் பெருமாள் சுந்தர ராஜப் பெருமாள் எனப் போற்றி அழைக்கப்படுகிறார். 108 வைணவத்திருப்பதிகளில் இத்தலமும் ஒன்று. திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் பெற்ற திருத்தலம். திருமழிசையாழ்வார் இத்தலத்தில் பள்ளிகொண்டிருக்கும் எம்பெருமானை

*''நாகத்தனைக் குடந்தை வெஃகாத்திருவெவ்வுள்*
*நாகத்தனையரங்கம் பேரன்பில் - நாகத்*
*தணைப் பாற்கடல் கிடக்கும் ஆதிநெடுமால்*
*அணைப்பார் கருத்த னாவான்''*

என்று போற்றிப்பாடுகின்றார்.

கிழக்கு நோக்கிய திருக்கோயில்; அழகே வடிவான பெருமாள். பாம்பணை மீது சயனித்த திருக்கோலம். காலின் அருகே ஸ்ரீதேவி, பூதேவி தாயார் இருக்க போக சயனம் என அழைக்கப்படு கிறது. பெருமாள் எழுந்தருளியிருக்கும் கருவறையின் மீது உள்ள விமானம் ''தாரக விமானம்'' என அழைத்துப் போற்றப்படுகிறது. பிரம்மாவுக்கும், வால்மீகி முனிவருக்கும் அருள் வழங்கிய தலம். தாயார் சுந்தரவல்லி அழகியவல்லி நாச்சியார் என்ற திருநாமம் கொண்டு பக்தர்களுக்கு அருள் வழங்கு கிறார். இக்கோயிலின் தலவிருட்சம் வில்வமரம் ஆகும்.

இக்கோயிலில் குலோத்துங்க சோழன், விஜயநகர மன்னன் தேவராய மகராயர் ஆகியோரது கல்வெட்டுகள் காணப்படுகின்றன. மற்றொரு கல்வெட்டின் துவக்கத்தில்,

*''அனைவயல் சூழ் அன்பிலவர்கள் நீடி*
*அழ கெய்திமுப்பொழுதும் கண்டு*
*போற்ற*
*மன்னும் அழகிய பெருமாள் இளையகோவை*
*மலர்மகளை மாருதியை எழுந்*
*தருவித் தோன்*
*கன்ன நயக்குடைத் தடக்கைப்பாருணநிதி*
*காண்டகு சீர்க் கிளைத் தாங்கி கலைகள் ஓதி*
*செந்நெல் வயல் சூழ் வீரசிங்கம் எங்கள்*
*சீர்க்குருகூர் நம்பி பெனுஞ் செழுமறை*
*யோன் தானே''*

என்று இக்கோயிலில் இராமர், லட்சுமணர், சீதை, அநுமன் ஆகியோர் வடிவங்களை எழுந்தருளிவித்தது பற்றிப் பாடலாகக் குறிப்பிடப்படுகிறது.

சோழமன்னர்களில் இரண்டாம் பராந்தகன், சுந்தரசோழன் என்று அழைக்கப்பட்டான். மதுராந்

## பாவம் தீர ஐந்தெழுத்து ஓதுக

கொல்வா ரேனும் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவர் ஆயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே.

– திருஞானசம்பந்தர்.

தகன் என்ற பெயரும் இவனுக்கு உண்டு. சுந்தர சோழனால் அளிக்கப்பட்ட தானத்தைக் குறிக்கும் செப்பேடு ஒன்று இவ்வூரில் கிடைத்தது. அது 'அன்பில் செப்பேடு' எனச் சிறப்பாக அழைக்கப் படுகிறது. சுந்தரசோழனுடைய 4-வது ஆட்சி ஆண்டில் வெளியிடப்பட்ட இச் செப்பேட்டில் நாராயண அநிருத்த பிரம்மாதிராஜர் என்பவருக்கு ஏகபோகமாக 10 வேலி நிலம் அளித்த செய்தி குறிப்பிடப்படுகிறது. ஏகபோக பிரம்மதேயமாக வழங்கப்பட்டதால் அரசுக்கு நிலவரி அளிக்கவேண்டாம். பண்டைநாளில் இருந்த கிராம ஆட்சிமுறை பற்றி தெரிந்துகொள்ள இச்செப்பேடு பெரிதும் உதவுகிறது.

அன்பில் சுந்தரராஜப் பெருமாள் மாசிமகம் அன்று ஸ்ரீரங்கம் கொள்ளிடம் ஆற்றுக்கு எழுந்தருளி அன்பர்களுக்கு சேவை சாதிக்கும் வைபவம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

கீழ் அன்பில் பகுதியில் உள்ள சிவன் கோயிலில் எழுந்தருளிய் இறைவன் சத்திய வாகீசு வரர், அம்பாள் சௌந்தரநாயகி எனவும் அழைக்கப் படுகின்றனர். இத்தலத்தின் தலவிருட்சம் ஆல மரமாகும். எனவே இத்தலம் 'அன்பில் ஆலந்துறை' என அழைக்கப்பட்டது. ''அன்பிலாலந்துறை வணங் குதும் வினை மாய்ந்திடும் வண்ணமே'' என நாவுக் கரசர் பெருமான் போற்றுகின்றார். கொள்ளிடம் ஆற்றில் வெள்ளம் வந்தால் இத்தலத்தின் எதிர் கரையில் உள்ள சடையார் கோயிலிலிருந்து 'மயிலுங், குயில் சேர் மடஅன்னம் முதலான பறவைகள் அன்பிலாந் துறையிலுள்ள பொழில்களுக்கு இரைச்ச லிட்டவாறு வந்து சேரும்'' என்று ஞானசம்பந்தர் பெருமான் போற்றுகின்றார். இதனைத் தலைசாய்த்து உற்றுக் கேட்டதால் இங்குள்ள விநாயகர் 'செவிசாய்த்த விநாயகர்' என்று அழைக்கப்படுகின்றார். தலையை சற்றே சாய்த்து அமர்ந்த நிலையில் காணப்படும் இத்திருமேனியின் அழகே தனிதான். தட்சிண கைலாசம் எனப்போற்றப்படும் இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவன்திருமேனி உருத் திராக்கத் திருமேனி போன்று காணப்படுகிறது.

இரண்டாவது கோபுரத்தில் மட்டும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. பராந்தகச் சோழன், இராஜராஜசோழன், மூன்றாம் இராஜேந்திர சோழன், மாறவர்மன் குலசேகர பாண்டியன் போசள மன்னன், வீர இராமநாதன் ஆகியோர் கல்வெட்டுகள் இக்கோயிலின் பெருமையை எடுத்துக் கூறுகின்றன.

### மாரியம்மன் கோயில்

அன்பிலில் உள்ள மாரியம்மன் கோயில் மிகவும் சிறப்பான வழிபாட்டுத் தலமாக விளங்கு கிறது. சீதளாதேவி எனப்படும் இந்த அம்மன் சுயம்பு வடிமானது எனவும், கொள்ளிடம் ஆற்றின் வெள்ளத் தில் மீனவர்களின் வலையில் அகப்பட்டதால் இங்கே தாபிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அம்மன் திருவுருவம் சுதையால் ஆனது. சமயபுரம் மாரியம்மன் போன்றே அழகிய வடிவம். 8 கரங் களில் திரிசூலம், சூலம், சக்தி, வஜ்ஜிரம் உடுக்கை, பாசம், கத்தி, கபாலம் தாங்கி கருணை பொங்கும் பார்வையுடன் பக்தர்களுக்குக் காட்சி தருகிறாள். கண் பார்வை சரியில்லாதவர்கள் இத்தலத்திற்கு வந்து வழிபட்டு நலம் பெற்று திரும்புகின்றனர். கோரிக்கை கள் நிறைவேற சுயம்பு அம்மனுக்கு பால், தேன், அபிஷேகம் செய்கின்றனர். சித்திரை வருடப்பிறப்பு, வைகாசி- பஞ்சப்பிரகாரம், ஆவணி- சண்டிஹோமம், கார்த்திகை - சோமவாரம், பங்குனி - பூச்சொரியல் முதலிய விழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

சுந்தரராஜப்பெருமாள், சத்தியவாகீசுரர் கோயில்கள், மாரியம்மன் கோயில்கள் மூன்றும் ஸ்ரீரங்கம் அரங்கநாதர் திருக்கோயில் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. வரலாற்றுச் சிறப்பும், வழி பாட்டுச் சிறப்பும் நிறைந்த அன்பில் திருக்கோயில் களை வழிபட்டு நலமடைவோம்.

★★★

# வினாவும் விடையும்

**(கம்ப இராமாயணத்திலிருந்து வாசகர் வினவிய இரு வினாக்களுக்கு விரிவாக விடையளித்துள்ளார் கடந்த 40 ஆண்டுக் காலங்களாக கம்பனில் ஊறித்திளைத்துவரும் கம்பன் கவிநயமணி வே. தியாகராசன் அவர்கள். படித்துப் பயன்பெற வேண்டுகின்றோம்.)**

**கேள்வி : அடியேன் ஒரு ராமபக்தன். வாலியை மறைந்து இராமபிரான் கொன்றார் என்றும், சீதா பிராட்டியைக் குற்றங்கண்டு நெருப்பில் விழச் சொன்னார் என்றும் சிலர் பேசுவது கண்டு வேதனையுண்டாகிறது. என் தெய்வம் குற்றமற்றது என்பது அடியேன் கருத்து. தாங்கள் இவ்விரண்டு நிகழ்ச்சிகள் பற்றிக் கொண்டுள்ள கருத்தை அடியேனுக்குத் தெரிவித்து என்மனம் நிம்மதியடையச் செய்ய வேண்டுகிறேன்.**

**பதில் :** இராமபிரான் குணங்களால் உயர்ந்த வள்ளல் - கருணை வள்ளல் என்பது கம்பன் வாக்கு.

சீதாபிராட்டி இலக்குவனது காவலில் இருந்த போது, ''சீதா! லட்சுமண!'' என இராமபிரானது குரல் போல் கேட்க, இராமபிரானுக்கு எந்த ஆபத்தும் வராது எனக்கூறி சமாதானம் செய்ய முயன்றார் இலக்குவன் என்பது வரலாறு.

இவ்விடத்தில் இராமபிரானைத் தேடிச் செல்வதற்கு, சீதா பிராட்டியைத் தனியாக விட்டுச் செல்ல இலக்குவன் தயங்கினார். சீதாபிராட்டி திடீரென இலக்குவனை நிதானம் தவறி **''லட்சுமணா! தமயனுக்கு துணை புரிபவராய் நடிக்கும் நீர் சத்ரு போலவே இருக்கிறீர். அதனால் இவ்வளவு அபாயத்திலும் தமயனார் இருக்குமிடம் போக மறுக்கின்றீர். என்னை உத்தேசித்தே இராமன் மாண்டுபோக வேண்டும் என நினைக்கிறீர். என் மீது ஆசையால் தான் இராமபிரானைத் தேடிச் செல்லாதிருக்கிறீர். இந்த ஆபத்து உமக்கு இஷ்டமானது. தமயனிடத்தில் உமக்கு அன்பில்லை.''** என்றெல்லாம் கூறி விட்டாள். இலக்குவன் மேலும் சமாதானம் கூற, சீதாபிராட்டியார் மேலும் **''அற்பனே! நீசத்தொழிலில் துணிந்துவிட்டவனே! இரக்க மற்றவனே! இராமபிரானது துன்பத்தை உனக்குச் சம்மதமானதாக நினைக்கிறாய். எக்காலத்திலும் ரகசியமாகத் தீங்கு புரிகிறவர்களும் இரக்க மற்றவர்களும் சத்ருக்களுமாகிய உன்போன்றவர்களிடத்தில் கொடிய செயல் என்பது ஆச்சரியமில்லை. என்னை உத்தேசித்தோ அல்லது பரதனால் நியமிக்கப்பட்டோ நீ எங்களைத் தனிமையாகப் பின்பற்றி வந்தனை. உன்னுடைய அல்லது பரதனுடைய எண்ணங்கள் நிறைவேறாது. இராமனைக் கணவனாக அடைந்த நான் பிறரை எப்படி மதிப்பேன். உன் எதிரிலே உயிர்விட்டு விடுகிறேன்''** எனச் சீதாபிராட்டி சினந்து பேசி விட்டாள். (வால்மீகி இராமாயணம் - ஆரண்ய காண்டம் 45-வது சருக்கம்.)

கம்பர் சீதாராமர்களை தெய்வமாக மதிப்பவர். எனவே இவ்வளவையும் சீதாபிராட்டி நேரில் கூறியதாகச் சொல்லாமல் தொனிப்பொருள் வைத்துப் பேசி வட்டார். சீதாபிராட்டி இலக்குவனிடம் கூறிய சொற்கள்: கம்பராமாயணம்: (ஆரண்யகாண்டம் சடாயு உயிர்நீத்தபடலம்)

**குற்றம் வீந்த குணத்தின் எங்கோமகன்**
**மற்றைவாளரக்கன் புரி மாயையால்**
**இற்று வீழ்ந்தனன் என்னவும் என்னயல்**
**நிற்றியோ இளையோய்! ஒரு நீ என்றாள்.**

குற்றம் வீந்த குணத்தின் எங்கோமகன் - மற்றை வாளரக்கன்புரி மாய்கையால் இற்று வீழ்ந்தனன்: **குற்றமில்லாத இராமபிரான் அரக்கனால் கொல்லப் பட்டான். (குற்றமுள்ள நீ இங்கு நிற்கிறாய் என்பது தொனி)** என் அயல் நிற்றியோ! **என்பக்கத்தில் நீ இந்நிலையில் நிற்கலாமா?** என்பது தொனி. **இளையோய் ஒரு நீ!** இளம் வயதினளான என் அருகில் இளம் வயதினனாகிய நீ நிற்கலாமா? என்பது தொனி. வயதில் இளையவன். குணத்திலும் சின்னவனா!

**நம் காலமாயிருந்தால்** இலக்குவன் இராமபிரானிடம் இதனைக் கூற இராமபிரான் சீதா பிராட்டியைக் கண்டிக்க அதன் காரணமாக அண்ணன் தம்பிகளின் பிரிவே ஏற்பட்டிருக்கலாம்.

இராவணனது சிறையிலிருந்து விடுவிக்கப் பட்டபின் சீதாபிராட்டியைக் கடுமையாகப் பேசி விட்டார் இராமபிரான். ஆனால் தீயில் இறங்கு என இராமபிரான் கூறவேயில்லை.

**யாதி யான் இதற்கு இயம்புவது? உணர்வைச்**
**சேதியா நின்றதுன் ஒழுக்கம் செய்தது?**
**சாதியால் அன்றேல் தக்கதோர் நெறி**
**போதியால் என்றனன் புலவர் புந்தியான்.**

எனக்கு வேதனையுண்டாக்கும்படி நடந்து கொண்ட நீ இறந்துபோ அல்லது எப்படி வேண்டுமானாலும் போ என்றார். இராமர் தவறு செய்யக்கூடியவர் அல்ல என்பதை அவர் அறிவாளி என **புலவர் புந்தியான்** எனக் குறிப்பிடுகிறார் கம்பர்.

சீதாபிராட்டி இது கேட்டு திடுக்கிட்டு வேதனையால் பல சொல்லிப் புலம்பும்போது பக்கத்தில் நின்ற இலக்குவனைக் கண்டாள். தன் குற்றத்தை உணர்ந்துவிட்டாள். ''அண்ணன் மனைவியான என்னை அனுதினமும் அன்னையாக எண்ணி வணங்கிய இலட்சுமணா! உன்னைச் சந்தேகித்தேன். அப்போது உன்மனம் என்னபாடுபட்டிருக்கும் என்பது தெரியவில்லை. இன்று என் குணத்தை இராமபிரான் சந்தேகங்கொண்டவுடன் உன்மனம் என்ன பாடுபட்டிருக்கும் என அறிந்து கொண்டேன். என் குற்றத்திற்கு மன்னிப்பே கிடையாது. இலட்சுமணா, உன்னை இவ்வாறு பேசிய என்னை உன் கையால் தீவைத்து அழித்துவிடு. **இளையவன் தனையழைத்து இடுமின் தீயென வளையொலி முன்கையாள் வாயிற் கூறினாள்.**

சீதாபிராட்டி தன் குற்றத்தை உணர்ந்து கொள்வதற்காக இராமபிரான் பேசினாரே தவிர, சீதையை இராமபிரான் சந்தேகிக்கவில்லை. அப்படிச் சந்தேகப் படக் கூடியவனாக இருக்கும் பட்சத்தில் அவள் பிரிவு தாங்காமல் புலம்பியிருக்க மாட்டான். அவ்வளவு பெரிய போரையும் செய்திருக்கமாட்டான். எனவே சீதாபிராட்டியைத் தன் குற்றம் உணர்ந்து திருத்துவதற்காகவே இராமபிரான் சந்தேகப்படுவது போல் பேசினார் என்பது பெரியோர்கள் கண்ட உண்மை. எனவே இராமபிரானுக்கு குணதோஷம் கற்பிப்பவர்களைப்பற்றிக் கவலைகொள்ளாது இராமனிடம் பக்தியைச் செலுத்துவோமாக!

**வாலியை மறைந்து நின்று கொன்ற காரணம்**

தன் மனைவியை எடுத்துச் சென்ற இராவணனை ''இன்று போய்ப் போர்க்கு நாளைவா'' எனக் கூறிய இராமபிரான் வாலியை ஏன் கொல்ல வேண்டும்?

**இராவணனைக்காட்டிலும் கொடியவன் வாலி.** இராவணன் சீதையைச் சிறையில் தான் வைத்தான். வாலி, தம்பியின் மனைவியான ருமையை, தனக்கு மகளாக எண்ணிக் காப்பாற்ற வேண்டியவளை **மனைவியாகவே தீண்டி அனுபவித்து விட்டான்.** குரங்குகளில் அண்ணன் மனைவி என்ற மாதிரியான அறம் கிடையாது என்ற வாதம் செல்லுபடியாகாது. குரங்கான போதிலும் வாலி தினமும் சிவபூசை செய்தவன். அதுமட்டுமல்ல, தர்ம சாத்திரம் படித்தவன். அரக்கன் உன் மனைவியை எடுத்துச் சென்றால் அதற்கு ஒரு குரங்கைக் கொல்ல மனுதர்ம சாத்திரம் கூறியுள்ளதோ என்று கேட்டான். **குரங்கெனும் விலங்கிற்கு மனுதருமசாத்திரம் தெரியுமா? குரங்கான போதிலும் தரும சாத்திரம் படித்த வாலி மனிதர்களைக்காட்டிலும் மேம்பட்டவன். பிறன் மனைவியைத் தீண்டுவது கொடியபாபம். அதிலும் தன் மகளாக எண்ணவேண்டியவளைத் தீண்டியது மிகக் கொடிய பாபம். இத்தகையவனைக் கண்டு இராமபிரான் அஞ்சி மறைந்து நின்று அடிக்க வேண்டிய தேவையில்லை. ஆனால் தீயாரைக் காண்பதுவும் தீதே என இராமபிரான் எண்ணினார். நேரில் வந்தால் இராமபிரானது கருணையை அறிந்தவாலி காலில் விழுந்து அடைக்கலம் புகுந்து விட்டால், தஞ்சமென்றடைந்தவரைக் காத்துத் திரவேண்டும்.**

தருமம் தெரிந்து தகாத செய்தவாலியை நேரில் காண விருப்பமில்லாத இராமபிரான் அவனை எக்காரணமும் கொண்டு காப்பாற்ற விரும்பவில்லை. பெருங்கொடுமை செய்த மாபாவியைக் காண விரும்பாத இராமபிரான் அவனைக் கொன்று விட்டார். உன் அம்பு தவிர உலகத்தில் தருமம் என்பது வேறு கிடையாது என வாலியே கூறிவிட்டான். **நின் சரமலால் பிறிது வேறு உளதோ தருமமே** என்பதே வாலியின் வாக்கு.

எனவே இராமபிரான் தருமத்தைக் காக்க எந்த நிலையிலும் விருப்பமுள்ளவர் என்பதை அறிய வேண்டும். ஜெயசீதாராம். **(It was not a regular warfare with Vali but was a punishment inflicted on Vali for having seduced another man's wife.)** தீயாரைக் காண்பதுவும் தீதே என எண்ணி இராமபிரான் மறைந்து கொன்றார்.

* * *

## பாவத்தில் கொடிய பாவம்

**எளிதென இல்இரப்பான் எய்தும் எஞ்ஞான்றும்**
**விளியாது நிற்கும் பழி**

- குறள்






திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் ஆலயத்தில் அருளாளர் அருணகிரிநாதர் விழா, அறநிலையத் துறை ஆணையாளர் திருமிகு ச. மெய்கண்ட தேவன் இ.ஆ.ப. அவர்களின் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. மயிலம் தமிழ்க்கல்லூரி முதல்வர் முனைவர் கார்த்திகேயன், ''திருக்கோயில்'' ஆசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம், தமிழ் ஐயா திருமிகு பாண்டுரங்கம் உள்ளிட்ட பலரும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். வேலூர் இணைஆணையாளர் திரு ப. ராஜா , பி.எஸ்.சி. பி.எல்., மற்றும் திருக்கோயில் நிர்வாக அதிகாரியும் உதவி ஆணையாளருமான திரு ஆறுமுகம் ஆகியோர் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

பதிவு எண். TN (MSC) 7039 / WPP.





கோவை மாவட்டம் ஈச்சநாரி அருள்மிகு விநாயகர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தங்கத்தேர்ப்புறப்பாட்டினை மாண்புமிகு தமிழ்வளர்ச்சி, தமிழ்ப்பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தம் திருக்கரங்களால் தொடங்கி வைத்தார்கள். பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க அடிகளார், கோவை இணை ஆணையாளர் திருமிகு கே.கே. இராஜா, மற்றும் திரு. பி.கே. துரைசாமி ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**வெளியிடுபவர் :** ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
**ஆசிரியர்** : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
**அச்சிட்டோர்** : **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானிஜான் கான் தெரு, சென்னை - 600 014.**